397

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

## A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

6 FEB 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ஞ ஜனவரி மீ 7உ [No. 1

பொருளடக்கம்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 1 | 5. | ஜூலியஸ்ஸீஸர் (அங்கம் 1. களம் 1.) ஷேக்ஸ்பியர் நாடகம் | 11 |
| 2. | தமிழ்ப்பாட நளவெண்பா—சுயம்வர காண்டம் | 3 | 6. | கம்பராமாயணம் (விராதன் வதைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. | 14 |
| 3. | குன்றுடையானும் மக்களும் W. V. கோவிந்தசாமி ராஜு BA., LT. | 6 | 7. | அப்பர் (64 கலை—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. | 17 |
| 4. | கந்தபுராணமும் சங்கநூல்களும் பண்டித் R. திம்மப்பா ஐயர் | 9 | 8. | வர்த்தமானம். | 19 |


சந்தாத் தொகையை அனுப்பிவைக்காத நண்பர்களுக்கு இன்று முதல் வி. பி. அனுப்பி வருகின்றோம். தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும், நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

## கலாநிலயம்

188149.

### கலாநிலயம் கைக்கொண்ட கருமம்.

இன்றைக்குக் கலாநிலயம் ஐந்தாவது ஆண்டு எய்துகின்றது. கலையெனும் உணர்வுகொண்டு உலகத்தோடு ஒத்துவாழ்வதற்கோர் கைத்துணையாய் அமைய வேண்டும் எனும் ஆசையுடன் நிலவிய இந் நான்கு ஆண்டுகளில் நிகழ்த்திய கருமங்களால் நிலைத்த பயன் சிறியதன்றென எண்ணற் கிடமுளது.

அரிது அரிது மானிடர் ஆதல் அரிது, என்னும் அவ் வாக்கியத்தை, 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது' என்றிருப்பதுபோல் படித்துப் பொருளாக்கிக் கொள்வதன் விபரீதத்தை முன்னோர் தலையங்கத்தில் காட்டியிருக்கின்றோம். மானிடராய்ப் பிறத்தலில் யாதும் அருமையில்லை. முன்னையூழ் வினையினாலோ, வேறெக்காரணத்தினாலோ இப்பிறவி வாய்க்கின்றது. நம்முடைய செயலால் ஆகாததொன்றன் அருமையைப் பாராட்டப் புகுவானேன்! பிறந்த உருவமே பெறற்கரியதெனக் கொள்ளல் பேதைமை. பிறந்தபின் மனத்தின் முதிர்ச்சியால் ஆவதே மானிடமாகும். மனத்தின் எவ்வகை வளர்ச்சியும் முதிர்ச்சியும், பிறந்த உருவத்தை மானிடனுக்கும் என்பதை அறிந்து அவ்வறிவை ஆற்றுவித்தலின் அருமையையே அவ்வாக்கியம் உண்மையில் தெரிவிக்கின்றது. மனிதர் ஆவதற்கேற்றவோர் ஆதாரமாயிருக்கின்ற அளவிற்றான் இம்மானுடப் பிறவி போற்றத்தகுவதாம். அவ்வாறின்றி ஆகாரம் நித்திரை பயம் அனையவைகளுக்கே ஆளாகி நிற்கும் வரையில் விலங்குகளேயாயிருந்து பிறகு, பகை பொறாமை பேராசை செருக்கு முதலியவைகளை மேற்கொண்டு பேய்களாய் மாறி முடிவதென்றால், இடையிலே மானுடர் ஆகிய நாள் ஒருபோதுமில்லை என்பது வெளிப்படை. மானுட சரித்திரம், தொகுதியிலும் தனிமையிலும் பெரும்பாலும் இன்னதே.

பிறந்த உருவம் பிழைபட விலங்காய் வளர்ந்து பேயாய் முதிர்கின்றோமோ அல்லது பிறவிக்கு உடன்பட்டு மனிதர் ஆகின்றோமோ என்பதை அவ்வப்போது சோதித்துக்கொள்வதற்குரிய அடையாளங்கள் சில உள. இவ்வடையாளங்களில் ஒன்றினை உட்கொள்ளுமளவில் 'கலாநிலயத்தின்' நோக்கமும் அந்நோக்கத்திற்கு

ஏற்றபடி இது இயற்றிவருங் கருமத்தின் தன்மையும் வெளிப்பட்டனவாகலாம்.

காசுக்குக் கேடு கண்ணோட்டம் என்று பொருள்படத் "தாக்ஷண்யம் தன நாசனம்" என்றோர் வாசகம் உலகநடையில் வழங்கிவருவதை அறியாதார் மிகச் சிலர். எத்திறத்தோர்க்கும் இயற்கையாய் இதயத்தே தளிர்க்கின்ற அருளினைப் பலர் காசின்பால் இருக்கும் ஓர் ஆசையால் சிதைத்துவிடுவதுமன்றி அதுவே மனிதனுக்குத் தக்க மதியென்றுங் கருதிப் பாராட்டுகின்றனர். இந்தக் கொள்கை ஊடாடுகின்றவரையில் விலங்கின் வாழ்க்கையே வளர்கின்றதெனக் கூறலாம். மற்று, தனமும் தனத்தினால் எய்தலாம் என்னும் தன்னலமும் இன்றியமையா நிலைமைக்கு நாம் ஆளாயினோர் போல் தோன்றுவதாலன்றோ கண்ணோட்டத்திற் கிடங்கொடுக்கவொட்டாமல் தடுக்கப் பெறுகின்றோம் என்னும் பரிபவத்தால், அவ்வாக்கியத்தைத் "தனம் தாக்ஷண்ய நாசனம்" என மாற்றிப் பயில நம் மனந் தூண்டத் தலைப்படும் நாளே நாம் மனிதர் ஆகத் துவக்குகின்றோம் என்னுங் குறிப்பை ஏற்றுக்கொள்ளலாம். இவ்வுண்மையைத் தழுவி ஸ்ரீமான் ஜினராஜதாஸா அவர்கள் சிலநாட்களுக்கு முன் தத்துவஞான சபையின்கண் நிகழ்த்திய கட்டுரையொன்றில், "பொருள்களால் மனிதன் அளக்கப்படும் இக்கால தனுதாய முறை முற்றிலும் ஒழிந்து, மனிதனே பொருள்களை அளப்பவன் இனி ஆதல்வேண்டும்" என்று சாற்றிய மொழிகளின் கருத்து மிகவும் ஆழ்ந்து உணர்ந்துகொள்ளத் தக்கதாம்.

பொருள்களைக் கொண்டு தன்னையேனும் பிறரையேனும் அளந்து மதிக்கப் பயில்பவன் ஒருபோதும் மனிதனைப்பற்றிய உண்மையையேனும் பொருளைப்பற்றிய உண்மையையேனும் மயக்கற உணர்ந்து உய்யமாட்டான். தன்னைக்கொண்டு புறவினை அளந்தபெருந்தகை சிபிச்சக்கரவர்த்தியையும், தான் உண்டு உடுத்துத் துய்ப்பதற்குஇருக்கின்ற பொருள்களைக்கொண்டு தன்னை அளந்துகொள்கின்ற தாற்கால முறையினோரையும் ஒப்புநோக்குங்கால் இவ்விருவருக்கிடையே கதிரவனொளிக்கும் நடுநிசி இருளிற்கும் உள்ள வேற்றுமை புலப்படும். பரிதிக்கும் இருளிற்கும் உள்ள இவ் வேற்றுமையின் நினைவு நிலைத்துநின்று இயங்கஇயங்க ஒருவன் பிறப்பின் உருவத்தினால் மாத்திரமன்றி வளர்ப்பின் வகையாலும் மானிடன் ஆகிவருகின்றான் என்பதைத் துணிந்துகொள்ளலாம்.

தன்னுடைய பெருமையைத் தெரியக்காட்டுவதற்குப் பொருள்களை அளவுகோல்களாய் அழைக்குந் தீமைதான் உலகத்தை இந்நாள் அலைத்துவைக்கின்றது. "பகதூர்ப்பட்டங்களே, பாங்குச் செக் புத்தகங்களே, உத்தியோகங்களே, அதிகாரங்களே, வீடுகளே, வயல்களே வந்து என்னை அளந்து யான் எவ்வளவு பெரியவன் என்பதைத் தெரியக் காட்டுங்கள்" என மனிதர் தம் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு செயலிலும் அழைபாமல் அழைத்துக் கொண்டிருக்கின்றனர். இதுவுமன்றி இவ் வளவுகோலை மற்றவர் மீதும் ஏவி அவர் பெருமை சிறுமைகளையும் தமக்கு அளந்து சொல்லச் சொல்கின்றனர். இதனால் எய்தும் நிலைதான் யாவதா [illegible]ற்கின்றவர் நீட்டியளப்பர்; வாங்குபவர் குறைத்தளப்பர். ஆதலின் ஒவ்வொருவனும் அப்பொருள்களைக்கொண்டு தன்னை நீட்டிநீட்டியளந்து விலைகூறிக் கொள்கின்றான்—மற்றவர்களோ அவனைக் குறைத்தளந்த விலைக்குக் கேட்கின்றனர். இவ்வர்த்தகத்தில், தன்னின் மெலியாரை நோக்கித் தன்னுடைமை அம்மா பெரிதென்ற செருக்கு ஒருபுறமும் தன்னின் வலியாரை நோக்கி, தான் பெற்றன வெல்லாம் எற்றே அவர்க்கு என்றஏக்கம் மறுபுறமும் பிடித்தலைத்து மக்கள்தம் வாழ்க்கையின் தலைவிரி கோலத்தைத் தோற்றுவிக்கின்றன.

இப்படியன்றித் தன்னைக்கொண்டு பொருள்களை அளக்கின்ற மனப்பயிற்சி கைவருமாயின் மனிதன் மானுடப்பெருமையின் உண்மைநிலையை உணர்ந்தவனாவான். இந்தப் பெருமையிற்றான் கலங்கலில்லா அடக்கமும் அமைதியும் உள. அமைதியை அளிக்காச் செல்வங்களெல்லாம் புல்லினும் கடையாயவே. கொள்ளப்படும் பொருளினும் கொள்கலன் பெரியது. எல்லாப் பொருள்களும் தன்னுளே அடங்கிவிடும் என்பது தெரிந்தக்கால், அண்ட சராசரங்கள் அத்தனைக்குந் தான் அதிகமாய்நிற்றல் தெற்றெனத் தெளிதல் வேண்டும். அதன்பின், தான் பெற்ற பொருளின் அளவே தன் பெருமையின் அளவுமாகும் என்னுந் தன்மை எங்குமில்லை. ஆதலின், தம் பெருமையின் மிகுதியை உணர்ந்தவுடன் மனிதர் அதிகமும் அடக்கமுடையவ ராதல்கூடும் என்னும்மூரனுடைய வாசகமும் உண்மையேயாய் முதிர்கின்றது. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்,

சேவடியால் மூவடிமண் தென்னரங்கத் தம்மான்நீ
மாவலிபால் வேண்டியநாள் மண்ணுலகோ-மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையேன் நெஞ்சமோ
பேசுங்கால் ஏதோ பெரிது

[தென்னரங்கப்பெருமானே, உன்னுடைய சிவந்தபாதங்களால் நீமாவலிசக்ரவர்த்தியின்பால்மூன்றடிமண்வேண்டிய போது, இம்மண்ணுலகமோ, அல்லது மூன்று உலகங்களையும் வீசி அளந்த உன் கால்களோ, அல்லது வல்வினையேனுயினும் அக்கால்களும் அடங்கப்பெற்ற என்நெஞ்மோ, பேசுமிடத்து எது பெரியது - விளம்புவாய்.]

என்று கேட்கும்போது, அண்டகோளகைகள் அத்தனையும் தன் உள்ளடியில் அடக்கிய திருமாலின் பாதங்கள் தன் நெஞ்சத்துள் அடங்குவதால் தன்னுடைய பெருமையைப் பேசாமற் பேசுகின்றவ ராகின்றார். இவர் தன்னைக்கொண்டு பொருளையளந்த சான்றோரில் ஒருவர்.

இக்காலம் உலகெங்கும் நடைபெறும் இயக்கங்களெல்லாம் பொருள்களைக்கொண்டு மனிதரை அளக்கப் பயிற்றுவிக்கும் பாழான நோக்கமே உடையன வென்பதைப் பொருளாதார முறைகளிலும் அரசியல் துறைகளிலும் மற்றெவ்வகைத் திருத்தங்களிலும் முயற்சிகளிலும் ஐயமறக் காண்பது அரியதன்று. உரிமையாற் பெரியராவோம் என்பார் சிலர், உடைமையாற்பெரியராவோம் என்பார் சிலர். பொருள்களுக்கும் பொருளற்ற உரைகளுக்கும் மேன்மேலும் அடிமைகளாகிவருகின்ற தாழ்மையைத் தெரிந்துகொள்ளும் வகையறியாமல் கடவுளென்னுங்கருத்தினின்றும் விடுதலை யடைய வேண்டுமென்பார் சிலர். இன்னணம் இயலுமிடமெல்லாம் மயக்கமே புக்குழக்கும் இந்நாளில், "நண்பர்காள், அமைதியற்ற இவ் வல்லல் ஏன்! ஆரவாரங்க ளேன்! அன்பென்ற பெயரினாற் செய்கின்ற துன்பங்களெல்லாம் ஏன்! வீண்வாதங்களேன்!



என்ன நினைத்து என்னசெய்கின்றீர். அகத்துளே நிலைத்திருக்கும் அமைதியல்லால் வேறோர் செல்வமில்லை. வருந்திவந்தோர் அரும்பசிகளைந்து அவர் திருந்துமுகங் காண்பதல்லால் வேறோர் உரிமையில்லை. பொருளிற்கு ஈடாக நம்மை நிறுத்துக் கொடுப்பதல்லால் வேறோர் அடிமையில்லை. நன்மையுந் தீமையும் பிறர்தர வருவதுமில்லை. உங்கள் பெருமைக்கு நீங்களேயல்லால் வேண்டப்படுவது வேறு யாதுளது? உங்களுக்கும் உற்றார் பெற்றோர்களுக்கும் கடவுளுக்கும் சம்மதமாய் உங்கள் வாழ்க்கை அமைந்துளதாயின் பிறிதொரு குறையில்லையே. இனிமையுந் தூய்மையும் தழுவித்தூங்கக் கடவுளின் கருத்திற் குடன்பட்டு வாழ்மின்-மானிடராகுமாறு இவ்வாறு" என்றென்று, மயங்கு முணர்விற்கு மருந்து கொடுப்பதென்ன வாரமோர்முறை வழங்கிவரும் இக்கலாநிலயம் ஆண்டோர் நான்கு அரிதின் கடந்து ஐந்தாம் பருவத்தை இன்று நப்பு முகமுடைய நல்லோர் உறவினோடும் நண்ணு[illegible]கின்றது.

அறிவுரைகள் பகர்வதாற்றானே யாவும் ஆற்றிவிடலாம் என்னும் மாயநம்பிக்கையால் மயங்கிமயங்கிக் கலாநிலயம் பயனற்றதாய் முடிய நினைத்திலது. நன்னெறி எந்நாளும் ஒன்றும் புறத்தினின்றுபுகட்டத் தக்கதன்று. அவரவர் உள்ளத்தினுழைத்திலே முளைத்துவளர்ந்தாலன்றி வாய்மையுந் தூய்மையும் முதிரமாட்டா. இவ்வளத்திற்கு உள்ளத்தைப் பண்படுத்தி வைப்பன கலைகள். பண்பட்ட உள்ளத்தில் வித்தெனவிழுவன மெய்யுணர்வுடைய புலவர்தம் மொழிகள். கலையுணர்வு கைவரும்படி செய்துவிட்டால் வாழ்க்கைக்குரிய பண்பும் பயனும் தாமே வந்தடையும். இஃதெங்ஙனம் நேருகின்றதென்பதை இதன்முன் பல தலையங்கங்களில் விரிவுற வரைந்திருக்கின்றோமாதலின் மீண்டுமிங் கவைகளை வரையாது விடுகின்றோம். சிற்பம் சித்திரம் சங்கீதம் நாடகம் அனைய கலைகளினும் காவியக்கலையே கைவருதற் கெளியதாம். கலாநிலயம், காவியங்களின் அறிவும் தெளிவும் அவைகளின்பால் ஆர்வமும் உண்டாவதற்கு வேண்டிய உதவியைப் புரிந்து தன் கருமத்தை ஆற்றிவரும் ஊக்கம் உடைத்து.

காவியக்கலையின் சிகரமாய கம்பருடன் இவ்வாண்டில் ஷேக்ஸ்பியரும் கலந்துகொள்கின்றார். தமிழ்ப் பயிற்சி எய்துதற்குத் துணைசெய்யவல்ல 'தமிழ்ப் பாடம்' இன்றுமுதல் மீண்டுமோர்முறை துவக்குகின்றது. மற்றைக் கட்டுரைகளும் ஒவ்வோர் வகையில் கலையுணர்வு தலைசிறக்க உதவவல்லனவாக இருக்கும். அழகுடையவாழ்க்கையை அருளுடன் நடத்திஎம்மையாளுடைய பெருமானுக்கு ஆளாகும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளாதா ரெல்லாம் பிறவாதாரே. தாயாகிப் பெற்றுப் பின்னோர் செல்கதி உய்க்குந் தன்மையால் சேயாகி நிற்கும் கலைகளின் கைகளுக்கு அடைக்கலம்.

—*=*—

# தமிழ்ப் பாடம் 1.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

பேசுவதுடன் எழுதவும் படிக்கவும் மாத்திரமல்லாது வேறு எவ்விதப் பயிற்சியும் இல்லாதவரும் சிறிதுகாலத்திற்குள் தமிழ்ப் பாஷையில் தேர்ச்சியுற்று வேண்டிய நூலைப் பிறருதவியின்றித் தாமே வாசித்தறிந்து அனுபவிக்கக் கூடியவர்க ளாகும்பொருட்டு, வாரந்தோறும் போதனை முறையில் இப்பாகம் எழுதிவரப்பெறும். இலக்கியச்செய்யுள்கள் சிலவற்றை இங்குநாம் போதிக்கும்முறையிற் கற்பவர் பின் எந்நூலையும் படித்து எளிதில் பொருள்செய்துகொள்ளலாம். இலக்கியப் பழக்கமும் சொற்களைப் பிரித்து அர்த்தம் செய்துகொள்ளுவதற்குப் போதுமான இலக்கணப் பயிற்சியும் பெறுவது, பார்க்கப் போனால், மிகச் சுலபம். ஒன்றுமாத்திரம் முக்கியம். அன்றன்று இதன்மூலமாய்க் கற்கும் பாடங்களை நம் நண்பர்கள் மறந்துவிடாமல் திருப்பித்திருப்பிப் பார்த்துக்கொண்டு வரவேண்டும். செய்யுள்களை மனப்பாடம் செய்துகொண்டால் கற்றதும் நன்றாக நிலைத்திருக்கும். மாணவர்களை நேரில் வைத்துக்கொண்டு சொல்லித் தருவதுபோல் எழுதுகின்றோமாகையால் இதனைத் தொடர்ந்துபடிப்பது ஒருபோதும் கஷ்டமா யிருப்பதற்கு இடமில்லை.

இந்த வகையில் போதிப்பதற்கு நாம் முதலில் புகழேந்திப் புலவர் பாடிய 'நளவெண்பா' என்னும் சிறந்த நூலை எடுத்துக்கொள்வோம்.

1. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்-பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

பதப்பிரிவு:—காமர் கயல் புரள காவி முகை நெகிழ தாமரையின் செம்தேன் தளை அவிழ பூ மடந்தைதன் நாட்டம் போலும் தகைமைத்தே சாகரம் சூழ் நல் நாட்டின் முன் நாட்டும் நாடு.

அன்வயம்:—சாகரம்சூழ் நல்நாட்டின் முன் நாட்டும் நாடு, காமர் கயல்புரள காவிமுகைநெகிழ தாமரையின் செம்தேன் தளை அவிழ, பூமடந்தைதன் நாட்டம்போலும், தகைமைத்து. நாடு, எழுவாய்; தகைமைத்து, பயனிலை.

பதவுரை

சாகரம் சூழ்-சமுத்திரம் சூழ்ந்த
நல் நாட்டின்-நல்ல நாடுகளிலெல்லாம்
முன்-முதன்மையாக
நாட்டும்-வைக்கப்படுகின்ற
நாடு-(நிடத) நாடானது,
காமர்-அழகிய
கயல்-கயல்மீன்கள்
புரள-புரள்வதாலும்,
காவி-நீலோற்பல மலர்களின்
முகை-மொக்குக்கள்
நெகிழ-மலர்வதாலும்,
தாமரையின்-தாமரை மலர்களது

செம் தேன்-சிவந்த தேன்
தளை அவிழ-கட்டு அவிழ்ந்து பெருகுவதாலும்,
பூ மடந்தைதன்-பூமிதேவியினது
நாட்டம் போலும்-கண்களைப் போன்ற
தகைமைத்து-தன்மையை உடையது.

கருத்து:-கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும் முதன்மையாய்க் கருதப்படுகின்ற நிடத நாடானது, அதனிலிருக்கின்ற ஆறு குளம் வயல்கள் போன்ற நீர்நிலைகளில், மாதர் கண்களுக்கு உவமையாய்க் கூறப்படும் கயல் காவி தாமரை முதலியன பொலிவுடன் விளங்குகின்றபடியால், பூமிதேவியின் கண்கள் போன்று இருந்தது. உடலிற் சிறந்த அவயவம் எப்படிக் கண்ணோ, அப்படியே உலகிற் சிறந்த நாடு நிடதமாயிற்று.

விளக்கம்:—தகைமைத்து - தன்மையை உடையது. இதுதான் இச்செய்யுளிற்குப் பயனிலை. எது தகைமைத்து ? நாடு - நிடதநாடு (எழுவாய்). அந்த நாடு எப்படிப்பட்ட நாடு? முன் நாட்டும் நாடு - முதன்மையாக நாட்டப்படுகின்ற நாடு? எவைகளுக்கு முதன்மையாய் நாட்டப்படுகின்ற நாடு ? நாட்டின் - மற்ற நாடுகளுக்கு. அந்த மற்ற நாடுகளும் எப்படிப்பட்டவை ? நல் நாடு - நல்ல நாடுகள். அவைகளைச் சூழ்ந்திருப்பது எது ? சாகரம் - கடல். சாகரம் சூழ் நல்நாட்டின் முன் நாட்டும் (இந்த நிடத) நாடு என்ன தகைமைத்து ? நாட்டம் போலும் தகைமைத்து - கண்ணைப்போன்ற தன்மையை உடையது (அதாவது கண்போன்று இருந்தது.) யாருடைய கண்போன்று இருந்தது ? பூ மடந்தைதன் - பூ - பூமியாகிய, மடந்தைதன் - பெண்ணினுடைய, பூமியாகியபெண் - பூமிதேவியினுடைய, [உன்தன் என்தன் என்பவை என்னுடைய உன்னுடைய எனப் பொருள்படுவதுபோல் இங்கு மடந்தைதன் - மடந்தையினுடைய, என்றாயிற்று].நிடதநாடு பூமிதேவிக்குக்கண்போன்றுஇருந்ததென்றால், எந்தவிதத்தில் இருந்தது ? புரள - புரள்வதால் (மழை பெய்ய நெல் விளையும், என்ற வாக்கியத்தில் பெய்ய என்னும் வினையெச்சம், பெய்வதால் என்னும் பொருளில் வருவதுபோலவே இங்குப் புரள நெகிழ அவிழ என்னும் வினையெச்சங்கள் காரணப்பொருளில் புரள்வதால் நெகிழ்வதால் அவிழ்வதால் என்று பொருள்பட நிற்கின்றன.) எதுபுரள்வதால்? கயல் புரள்வதால் - கயல் மீன்கள் புரள்வதால். கயல் மீன்கள் எப்படிப்பட்டவை? காமர் கயல் - அழகிய கயல் மீன்கள். இன்னும் எதனால் நிடதநாடு பூமிக்குக் கண்போன்று இருந்தது? நெகிழ - மலர்வதால். எது மலர்வதால்? முகை நெகிழ - மொக்கு மலர்வதால். எதனுடைய மொக்கு? காவி முகை - நீலோற்பலத்தினுடைய மொக்கு. பின்னும் எதனால் அந்நாடு நிலமகளுக்குக் கண்போல இருந்தது? அவிழ - அவிழ்வதால். எது அவிழ்வதால்? தேன் - தேன். எப்படிப்பட்ட தேன் ? செம்தேன் - சிவந்த தேன். எதனது சிவந்த தேன் ? தாமரையின் செம்தேன் - தாமரையினது சிவந்த தேன்.

விரிவுரை:-நிடதநாட்டில் கயலும் காவியும் தாமரையும் இருந்ததென்றால்பூமிக்குக் கண்போன்று எப்படி அது ஆயிற்று ? மீன் நீலமலர் தாமரை ஆகிய இவை மாதர்களது கண்ணிற்கு உவமையாகக் கூறப்படும் பொருள்கள். மீனாக்ஷி, நீலாயதாக்ஷி,பத்மாக்ஷி அல்லது பங்கஜாக்ஷி என்னும் பெயர்களில் இந்தஉவமை வழங்கி வருவதைக் காண்க.

நாட்டின்சிறப்பைக் கூறவந்தகவி மீனையும் காவியையும் தாமரையையும் தேனையும் கூறுவானேன்? இவையெல்லாம் நீர்நிறைந்த இடங்களில் செழிப்பனவாதலால் அவைகளின் பிருதியை எடுத்துக்காட்டி நாட்டின் நீர்வளத்தை விளக்குகின்றார். நண்டு நத்தை இப்பி ஆமை வண்டு முதலிய ஜந்துக்களும் நீர்வளத்திற்கு அடையாளமாக இனிவரக் காண்பீர்.

---

2. கோதை மடவார்தங் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றால் - வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்றுளதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

பதப்பிரிவு:—கோதை மடவார்தம் கொங்கைமிசை திமிர்ந்த சீதக் களபம் செழும் சேற்றால் வீதிவாய் மானகரி வழுக்கும் மாவிந்தம் என்று உளது ஓர் ஞானம் கலை வாழ் நகர்.

அன்வயம்:—கோதைமடவார்தம்கொங்கைமிசைத் திமிர்ந்த, சீதம் களபம் செழும் சேற்றால், வீதிவாய் மானக்கரிவழுக்கும் மாவிந்தம் என்று, ஓர் ஞானக்கலை வாழ்நகர் (அந்த நிடத நாட்டில் தலைநகரமாக) உளது.

பதவுரை

கோதை - பூமாலை (அணிந்த)
மடவார்தம் - மாதர்களுடைய
கொங்கைமிசை - முலைகளின்மீது
திமிர்ந்த - பூசிய
சீதம் - குளிர்ச்சி பொருந்திய
களபம் - சந்தனக் கலவையின்
செழும் - செழுமையான
சேற்றால் - குழம்பினால்
வீதிவாய் - தெருக்களில் (செல்கின்ற)
மான - பெரிய
கரி - யானைகளை
வழுக்கும் - வழுக்கிவிடும் (தன்மையதான)
மாவிந்தம் என்று - மாவிந்தம் என்று பேருடைய
ஞானம் - மெய்யறிவிற்குக் காரணமாகிய
கலை - கல்வியானது
வாழ் - தங்கியிருக்கின்ற
ஓர் - ஒரு
நகர் - நகரம்
உளது - (அந்த நிடதநாட்டில்) இருக்கின்றது.

கருத்து:—கல்வியும் அக்கல்வியின்காரணமாக வளர்கின்ற மெய்யறிவும் தங்கி வாழ்வதும், அளவற்றசெல்வமும் இன்பமும் பொருந்தியதுமான மாவிந்தம் என்ற சிறந்த நகரம் அந்த நிடதநாட்டில் இருந்தது.

விளக்கம்:—உளது - இருக்கின்றது. (பயனிலை). எது உளது? ஓர் நகர். அந்த நகரில் எது தங்கியிருக்கின்றது ? கலை வாழ்கின்றது. கலை எப்படிப்பட்டது ? ஞானக்கலை - ஞானத்திற்கு ஆதாரமான கலை. அந்த நகரின் பேர் என்ன ? மாவிந்தம். அந்த நகரம் எப்படிப்பட்டது ? வழுக்கும் - கால் வழுக்கும்படி செய்யக்கூடியது. எதை வழுக்கி விழச்செய்யும் ? கரி - யானைகளை. அக் கரிகளும் எப்படிப்பட்டவை? மானக்கரி - பெரிய யானைகள். எங்கே இப்பெரிய யானைகளை வழுக்கும் ? வீதிவாய் - தெருக்களிலே. வீதிகளில் கரிகளை எதனால் வழுக்கும்? சேற்றால் - குழம்பினால். என்ன சேற்றால் ? களபச் சேற்றால் - கலவைச் சந்தனக் குழம்பினால். களபச்சேறு எப்படிப்பட்டது? செழும் - செழுமையானது. இன்னும் எப்படிப்பட்டது. சீதம்-குளிர்ச்சியானது. வீதியிலே வழிந்து யானைகளைக் கால்வழுக்கும் இந்தக் களபச்சேறு எது ? திமிர்ந்தகளபம் (முன்) பூசிய களபம். எங்குப் பூசிய களபம் ? கொங்கைமிசை - முலைகளின் மீது. யாருடைய கொங்கைமிசை ? மடவார்தம் கொங்கைமிசை - மாதர்களுடைய முலைகளின்மீது. அம்மடவார் எப்படிப்பட்டவர் ? கோதை - பூமாலையை அணிந்தவர் (மடவார் ; மடமை - இளமை அல்லது பேதைமை, அதை உடையவர் மடவார்)

விரிவுரை :—தெருவெல்லாம் சந்தனம் சேறாய்க் குழைந்திருந்ததென்றால் அந்நாட்டின் செல்வத்தைச் சொல்லவும் வேண்டுமோ! மனைதோறும் மாடங்களில் இருக்கும் மாதர்தம் முலையிலே பூசிய சந்தனம் மிகுதி யாதலால் அது பெருகி வழிந்து தெருவிலும் தேங்கியது. செல்வமிகுதியோடு அதைத் தீதற்ற வகையில் அநுபவிப்பதும் அந்நகரத்தில் அமைந்தது என்பது இவ்வருணனையின் நோக்கம். அயோத்திமா நகரை வருணிக்கின்ற கம்பர் அங்கு நிகழ்வதாகக் கூறிய ஒரு சிறு காதல்நாடகம் புகழேந்தியின் நினைவிற்கு வர இவர் இச்செய்யுள் எழுதியிருக்கின்றார் என்று தோன்றுகிறது. அது பின்வருமாறு :—

ஆடுவார் புரவியின் குரத்தை யார்ப்பன
சூடுவா ரிகழ்ந்தவத் தொங்கல் மாலைகள்
ஓடுவா ரிழுக்குவ வூட லூடுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே.

(பாலகாண்டம், நகரப்படலம் 56-வது செய்யுள்)

அந்த அயோத்தி நகரத்து மாளிகையில், தன் நாயகிக்கு அருகு எய்திய தலைமகன் அவள் ஊடியிருக்கக் கண்டு அதைத் தணிப்பதற்காக மெல்ல ஒரு பூமாலையை அவளுக்குச் சூட்டி விளையாடப் பார்க்கின்றான். அவளோ மிகுந்த கோபம் உடையவளாயிருக்கின்றபடியினால் இவன் விரும்பி இழுக்கும் விளையாட்டிற்கு இடங்கொடுக்காமல் சினத்தோடு அம் மாலைகளை அகற்றி எறிந்துவிடுகின்றாள். வீடுதோறும் இவ்வாறு வீசி எறியப்பட்ட மாலைகள் தெருவெல்லாம் அடர்ந்து கிடக்கின்றனவாம். ஆதலால் அத் தெருக்களில் குதிரையின்மீது போகின்றவர்கள் போவதற்கு முடியாமல் பூமாலைகளிற்சிக்கிக் குதிரைகளின்கால்கள் இடறுகின்றன.இவ்வாறு இடருற்றுக் குதிரைமேல்வருந்திய குமரர்கள் தாம் சென்ற வேலையை முடித்துத் திரும்பும்போது குதிரையில் வருவதற்கு அஞ்சி அவைகளை அங்கேயே விட்டுவிட்டுக் கால்நடையாய் வந்தால் கஷ்டமிருக்காது என்று மீள்கின்றார்களாம். ஆனாலோ இவர் திரும்புவதற்குள் மனைகளிடத்தில் நாயகனும் நாயகியும் ஊடல்தீர்ந்து கூடினவர்களாகி ஒருவர்மீது ஒருவர் சந்தனக்குழம்பினைக் கொட்டி விளையாடவே, ஒவ்வொரு வீட்டினின்றும் பெருகிய சந்தனக்குழம்பு தேங்கிக் குழைந்து வீதிகளில் சேறாகியிருப்பதால், குதிரையிற் சென்றால் மாலை மாட்டி இடறுமெனநினைத்துக் காலால் நடந்து இப்பொழுது வருகின்றவர்கள் அச் சேற்றில் வழுக்கிவழுக்கி விழுவாராம். இன்னவாறு உள்ளிருக்கும் காதலர் தம்முள் ஊடினாலும் கூடினாலும் இருவிதத்திலும் வெளியிற் செல்லும் ஜனங்களுக்குக் கஷ்டமே விளைகின்றதெனக் கம்பர் சிரித்துச் சொல்கின்றார்.

இவ்வித நிகழ்ச்சிகள் செல்வத்தோடமைந்த வாழ்க்கைக்கும் அவ்வாழ்க்கையில் அநுபவிக்கும் இன்பத்திற்கும் அடையாளம்.

---

3. நின்றுபுயல் வானம் பொழிந்த நெடுந்தாரை
யென்று மகில்கமழு மென்பராற்—றென்ற
லலர்த்துங் கொடிமாடத் தாயிழைபா ரைம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

பதப்பிரிவு:—நின்று புயல் வானம் பொழிந்த நெடும் தாரை என்றும் அகில் கமழும் என்பர்ஆல் தென்றல் அலர்த்தும் கொடி மாடத்து ஆய் இழையார் ஐம்பால் புலர்த்தும் புகை வான் புகுந்து.

அன்வயம்:—தென்றல் அலர்த்தும்கொடிமாடத்து ஆய்இழையார் ஐம்பால்புலர்த்தும் புகை வான்புகுந்து, (அந்த மாவிந்தநகரில்) வானம்நின்று புயல்பொழிந்த நெடும்தாரை என்றும்அகில்கமழும் என்பர்.

பதவுரை

தென்றல் - தென்றல் காற்றானது
அலர்த்தும் - விரியச்செய்கின்ற
கொடி - கொடிகள் கட்டிய
மாடத்து - மாளிகைகளில்,
ஆய் - தேர்ந்தெடுத்த
இழையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்
ஐம்பால் - (தமது) கூந்தலை
புலர்த்தும் - உலர்த்துகின்ற
புகை - (வாசனைப்) புகை
வான் - ஆகாயத்தில்
புகுந்து - புகுந்து இருக்க (பின்),
வானம்நின்று - ஆகாயத்திலிருந்து
புயல் - மேகங்கள்
பொழிந்த - சொரிந்த
நெடும் - நீண்ட
தாரை - மழைத்தாரைகள்
என்றும் - எப்பொழுதும்
அகில் - அகிலின் வாசனையை
கமழும் - வீசும்
என்பர் - என்று (மாவிந்தநகரத்தைப் பார்த்து வந்தவர்) சொல்வர்—ஆல், என்பது அசை.

கருத்து :—மாவிந்தமென்னும் அந்தச் செல்வத் திருநகரிலே, நீராடியபின் மாதரெல்லாம் தம் கூந்தலை அகில்புகை ஊட்டி உலர்த்த, உயர்ந்த மாடங்களிலிருந்து எழுந்த இப்புகை வானத்தில் படிந்து மேகத்தோடு கலந்திருந்து பிறகு அம்மேகங்கள் மழைபெய்யும்போதெல்லாம் அந்தப் புகையும் மழைத்தாரையோடு இறங்கி நகரெங்கும் அகில்மணம் கமழும்.

விளக்கம்:—என்பர் - என்று கூறுவார். (பயனிலை) (யார்? அந்நகரத்தைப் பார்த்திருப்பவர் எழுவாய்.) அவர் என்ன என்பர் ? கமழும் என்பர். என்ன கமழும் என்பர் ? அகில் கமழும் என்பர். எது அகில் கமழும் என்பர்? தாரை. எப்படிப்பட்ட தாரை? நெடும்தாரை. இன்னும் எப்படிப் பட்டது அந்தத் தாரை ? பொழிந்த நெடுந்தாரை ? எது பொழிந்த தாரை? புயல் பொழிந்த தாரை.அந்தப் புயல் எங்கிருந்து பொழிந்தது ? வானம்நின்று - வானத்திலிருந்து. மழைத்தாரை அகில் கமழ நேர்ந்ததற்குக் காரணம்

என்ன? புகுந்து - புகுந்ததால். எங்குப்புகுந்து?வான் புகுந்து. எது புகுந்து? புகை. எந்தப் புகை? புலர்த்தும் புகை. எதை உலர்த்தும்புகை? ஐம்பால் - தம் கூந்தலை. யார் தம்கூந்தலைப் புலர்த்துகின்றனர்? இழையார் - (இழை - ஆபரணம், அதை அணிந்தவர் இழையார் - மாதர்) அந்த இழை எப்படிப் பட்டவை? ஆய் - ஆய்ந்த - தேர்ந்தெடுக்கப்பட்ட இழை - (அவரவர் வடிவிற்குஏற்க இதுஇது பொருந்துமென்று ஆராய்ந்தணிந்த இழை). ஆயிழையார் அகில்புகையூட்டித் தம் கூந்தலை எங்கே உலர்த்திக்கொள்கின்றனர்? மாடத்து-மாளிகைகளில். அம் மாளிகைகள் எப்படிப்பட்டவை? கொடிமாடம் - துகிற்கொடி கட்டியமாளிகை. அக்கொடிகள் என்ன செய்யப்படுகின்றன? அலர்த்தும் கொடி - விரிக்கப்படும் கொடிகள். எது கொடிகளை விரிக்கின்றது? தென்றல் - தென்றல் காற்று.

குறிப்பு:—(1) நின்று புயல் வானம், என்பதை, வானம்நின்று புயல் என்று மாற்றிக்கொள்க. வானம் நின்று என்பதில் 'நின்று' என்பதுஐந்தாம்வேற்றுமை உருபு; வானத்திலிருந்து என்று பொருள்தரும். வாய் நின்று வந்த உரை, என்றபோது வாயிலிருந்து வந்த வார்த்தை என்பதைப் போல. ஆகையால் 'நின்று' என்பது இந்த இடத்தில் நிற்கின்றசெய்கை ஒன்றும் காட்டாது.

(2) என்பரால் என்பதை, என்பர் + ஆல், என்று பிரித்துக்கொள்க. இதில், ஆல், என்பது, அசை. பொருளொன்றும் இல்லாமல் பாட்டின் ஓசை நிறைவதற்காக வரும் சொற்களுக்கு 'அசை' என்று பெயர். இவ்விதமே மாதோ மற்று போன்ற அசைச் சொற்களும் வரக் காண்பீர்.

(3) ஐம்பால், என்பதைப் பிரித்தால் ஐந்து + பால், என்று ஆகும். ஐ - ஐந்து, பால் = வகை = ஐந்து வகை. பின்னல் செருகல் முதலிய ஐந்து வகைகளில் அலங்கரிக்கப்படுவதால் கூந்தலுக்கு ஐம்பால் என்ற பெயர் வந்தது.

(4) புகுந்து:—முதற் செய்யுளில் புரள நெகிழ அவிழ என்ற வினையெச்சங்கள் காரணத்தைக் காட்டுவதைப் போலவே புகுந்து என்பதும் இங்குக் காரணப்பொருளில் வந்த வினையெச்சம். ஆனால் இலக்கணப் பிரகாரம் அது புரள நெகிழ என்பனவற்றைப் போல் 'புக' என்று இருக்கவேண்டும். எனினும் இங்குப் 'புகுந்து' என்று திரிந்து வந்திருக்கின்றது. உருவம் எதுவானாலும் பொருளைத்தான் கருதவேண்டும். இப்படி வழக்கத்திலும் இருக்கின்றது. அவன் நடந்து வந்தான், என்பதற்கும், அவன் நடந்து வருந்தினான், என்பதற்கும் வித்தியாசத்தைப் பாருங்கள். முதல் வாக்கியத்தில் 'நடந்து' என்பது வண்டியேறி வரவில்லை நடந்து வந்தான் என்று வந்த விதத்தை மாத்திரம் காட்டுகின்றது. பின் வாக்கியத்தில் நடந்து வருந்தினான் என்னும்போது 'நடந்து' என்பது, நடந்த காரணத்தினால் வருந்தினான் என்று வருத்தத்தின் காரணத்தைக் காட்டுகின்றது.

(5) என்பர், என்பதற்கு எழுவாய், 'அந்த நகரத்தைப் பார்த்திருப்பவர்' என்று வருவித்துக்கொள்ள வேண்டும். இது இப்பாட்டில் இல்லாமல் குறிப்பாய் நிற்கின்றது. அப்படித் தோன்றாமல் நிற்கின்ற எழுவாய்க்குத் தோன்றாஎழுவாய் என்று பெயர்.

## குன்றுடையானும் மக்களும்

### முன்னுரை

இக்கதை குன்றுடையானையும், அவன் மக்கள் பொன்னர், சங்கர், தங்காள் என்னும் மூவரையும்பற்றிக் கூறுவது. இது பாட்டுவடிவில் அமைந்து, 'அண்ணன்மார் பாட்டு' என்னும் பெயர்கொண்டது; கொங்குநாட்டில், உடுக்கைக் காரர்களால் பத்துப் பதினைந்து நாட்கள் தொடர்ச்சியாகப் பாடப்படுவது. இக்கதையின் முற்பகுதி, குன்றுடையான் வரலாறு; பிற்பகுதி, அண்ணன்மார் வரலாறு. சங்கருக்கும் பொன்னருக்கும் "அண்ணன்மார்" என்ற பொதுப் பெயர் வழங்கும் கொங்குநாட்டிலே, பல கிராமங்களில் அண்ணன்மார்களுக்குக் கோவில்கள் உண்டு. அவர்களுக்குக் கட்டிய முதற்கோவில், திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே, வீரமலையடிவாரத்தில், அவர்கள் இறந்துபட்ட படுகளத்துக்குச் சமீபத்தில், வீரப்பூர் என்னும் கிராமத்தில் உள்ளது. அங்கே ஒவ்வொரு வருடமும் மாசிமாதத்தில் அண்ணன்மார்க்குத் திருவிழா நடைபெறுகின்றது. அவ்விழாவிற்கு ஆயிரக்கணக்கான சனங்கள் போகின்றார்கள்.

இக்கதையைஎழுதுவதற்கு ஆதாரமாய்இருந்தவை மேற்சொன்ன 'அண்ணன்மார் பாட்டு'ம், 'அண்ணன்மார் நாடகம்' என்னும் ஓர் ஏட்டுப் பிரதியும், 'கள்ளழகர் அம்மானை' என்னும் நூலும், வீரப்பூரில் நடைபெறும் திருவிழாவும் ஆம். இவற்றிலே, 'அண்ணன்மார் பாட்டு' மாத்திரம் இக்கதையை ஆதியோடந்தமாய் விரித்துச் சொல்கின்றது; மற்றவை (திருவிழா நீங்க) அண்ணன்மார் கதையொன்றினையே கூறுபவை. 'கள்ளழகர் அம்மானை' அரைகுறையாய் உள்ளது. இவையாவும் பல இடங்களில் ஒன்றோடொன்று முரண்படுகின்றன. முரண்படுவனவற்றை ஒருவாறு ஒழுங்குபடுத்தி, வீரமலைக்குச் சென்று கதைநிகழ்ந்த பல இடங்களையும் நேரிற் பார்த்து, இக்கதையை எழுதலானேன். இக்கதை பல நூற்றாண்டுகளாக வழங்கிவரினும், உரைநடையில்முதன்முறையாக வெளிப்படுவது இன்றே.

கொங்குவேளாளர் குன்றுடையானைத் தமது மூதாதையென்று சொல்கின்றனர். 'கவுண்டர்கள்' என்னும் குலப்பெயர் கொண்ட இக் கொங்குவேளாளர்க்கும், கொங்குநாட்டுப் பழங்குடிகளாகிய வேட்டுவக் கவுண்டர்களுக்கும் நடந்த போர், இக்கதையின் பிற்பகுதியிற் கூறப்பட்டுள்ளது. இப் போர் காரணமாக, இவ்விரு கூட்டத்தார்க்கும் இன்றும் பகைமை உண்டு. இக்கதையின் முடிவை இவ்விருதிறத்தாரும் தத்தமக்குப் புகழ் தரத்தக்கது என்று சொல்லிக்கொள்கின்றனர்.

இக்கதை நிகழ்ந்த இடங்கள் பெரும்பாலும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கரூர்த் தாலூகாவிலும் குளித்தலைத் தாலூகாவிலும் உள்ளன.

---

குறிப்பு. இக்கதையை இயற்றிய ஸ்ரீமான் உ. வே. கோவிந்தசாமி ராஜு அவர்களே, "எங்கள் ஊர்" என்னும் நூலின் ஆசிரியரும் ஆவர். "ஆசிரியர்."



## முதற் புத்தகம்.

### குன்றுடையான் வரலாறு

#### 1. குன்றுடையான் தாய் தந்தையர்களை இழந்தது

ஆதிகாலத்திலே, சோழ தேசத்திலே, சிவ சோழ மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரியும் நாளிலே, பொன்னுவள நாட்டிலே, காராளவமிசத்திலே, வரகுதின்னைப் பெருங்குடியான் குலத்திலே,அம்பலநாத கவுண்டர் என்றபெயருடைய ஒரு வேளாளப் பிரபு இருந்தார். அவர் பரம்பரைச் செல்வக் குடியிற் பிறந்து, காணி கல்வெட்டுகளுடையவராய், சோழமன்னனுக்குட்பட்டு, உலுப்பை செலுத்திக் கணக்கு, மணியம், நாட்டாண்மை, அந்நாட்டுக் கருப்பராயன் கோவில் முகாமை முதலிய அதிகாரங்களை யடைந்து, பொன்னுவள நாட்டுக் கதிபதியாய் வாழ்ந்துவந்தார்.

அம்பலநாத கவுண்டருக்கு அப்பன் தொப்பையன் என்னும் பெயர்களையுடைய புத்திரர் இருவர் உண்டு. தந்தையார் காலஞ்சென்றபின் அப்புத்திரர் பொன்னுவள நாட்டைத் தமக்குள்ளே பங்கிட்டுக்கொண்டனர். இச் சகோதரரில் மூத்தவனான அப்பாக் கவுண்டன் சிற்றூலைப் பட்டணத்தில் தனது தந்தையின் அரண்மனையிற் குடியிருந்து ஆலத்தூரை யுள்ளிட்ட பல கிராமங்களை ஆண்டுவந்தான். இளையவனான தொப்பாக் கவுண்டன் சிற்றூலைப் பட்டணத்திற்குப் பத்து நாழிகை தூரத்திலுள்ள பாய்ச்சலூரிற் குடியேறி அதனைச் சார்ந்த பன்னிரண்டு கிராமங்களுக்கும் அதிபதியானான்.

பலவருடங்கள் கழிந்தும் அப்பாக்கவுண்டனுக்குப் புத்திரப்பேறு உண்டாகவில்லை. அதற்குக் காரணம், அவன் தந்தை தம் காலத்தில் நந்தனவனத்தில் மேய்ந்த ஒரு பசுவையும் அதன் இளங்கன்றையும் கொன்ற பாவமே என்று அந்நாட்டார் சொல்வதுண்டு. குழந்தை பிறக்கவில்லையென்ற கவலையால் வாட்டமுற்று அப்பாக் கவுண்டன், தன் குலதெய்வமாகிய மதுக்கரைச் செல்லாண்டியம்மனை வேண்டிக் குன்றின்மேல் தவமிருந்து, ஒரு புத்திரனுக்கு வரம் வாங்கிவந்தான். அவன் மனைவி கோலாத்தாள் கருப்பமுற்றுப் பத்தா மாதத்தில் ஓர் ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்தாள். குன்றின்மேல் தவமிருந்து பெற்றமையால் அக்குழந்தைக்கு உரியகாலத்தில் குன்றுடையான் என்று பெயரிட்டார்கள்.

தாய்தந்தையர்கள் நெடுங்காலம் பிள்ளையில்லாமலிருந்து பின்பு அருமையாய்ப் பெற்றமையால் இக்குழந்தையைச் சிறப்பாக வளர்த்து, ஐந்து வயதானபொழுது பள்ளியில் வைத்தார்கள். செல்வப் பிள்ளையாயும் மந்தனுமிருந்தமையால் குழந்தைக்குப் படிப்பேறவில்லை. வீட்டில் பெற்றோர் கண்டிப்பதுமில்லை, பள்ளியில் வாத்தியார் கடிந்து பாடம் கேட்பதுமில்லை. பந்தாடும் பிள்ளைகளோடு பந்தாடியும் கோலியாடும் பிள்ளைகளோடு கோலியாடியும் குன்றுடையான் பள்ளியில் ஐந்து ஆண்டுகளைக் கழித்தான். பையன் பேதையாயும் சூது வாது அறியாதவனாயும் ஈரநெஞ்சுஉடையவனாயுமிருந்தான்.

குன்றுடையாக் கவுண்டனுக்குச் சிற்றப்பனாகிய தொப்பாக் கவுண்டன் இறந்துபோய்ச் சிலவருஷங்களாயின.அவனுக்குப் புத்திரர் பன்னிருவர். அவர்கள் தம் மனைவிமக்களோடு பாய்ச்சலூரில் தமது தந்தை வீட்டில் வாழ்ந்திருந்தார்கள். அப்பன்னிருவரும் குன்றுடையானுக்கு வயதில் மூத்தவர்.

குன்றுடையானுக்குப் பத்தாம் வயது நடக்கையில் அவனுடைய பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டு, ஒரே நாளில், சடுதியில் உயிர் துறந்தார்கள். குன்றுடையான் தாய் தந்தையர் இறந்துபோனமை கண்டு அவர்கள்மீது வீழ்ந்து முகத்தோடு முகம்வைத்து அழுதான். 'அம்மா,' என்றழைத்து, அன்னையின் கரங்களைப் பற்றி விம்மிவிம்மிப் புலம்பினான். 'ஐயா', என்றழைத்து, தந்தையின் மார்பில் கைவைத்து, தந்தையின் பழைய அன்பை நினைத்து நினைத்துக் கண்ணீர் உகுத்தான். தாய்தந்தையர்களுடைய காலடியில் தலைவைத்து, 'அம்மா ஐயா, என்னைத் தனியாக விட்டுப் போனீர்களே, எனக்கு உடன்பிறந்தவர்களும் இல்லையே, என்னை யார் காப்பாற்றுவார்? எனக்குக் கதி யார்?" என்று கூக்குரலிட்டான். ஊர்க் குடியானவர்களும் அக்கம்பக்கத்தார்களும் வந்து, வாசற்படியில் கதவுநிலையில் சாய்ந்துநின்று அளவில்லாத துக்கத்தால் மூக்கிலும் கண்ணிலும் நீர்வடிய நின்று தேம்பித்தேம்பி யழும் பிள்ளைக்குத் தேறுதல் சொல்லி, ஆதரவு கூறி, அரவணைத்து, அவனை ஒருவாறு சாந்தப்படுத்தினார்கள்.

பின்பு ஊரார்கள் பாய்ச்சலூர்ப் பங்காளிகளுக்கு இழவுசொல்ல இரு மாதிகர்களை யனுப்பினார்கள். மாதிகர்கள் பாய்ச்சலூரை யடைந்து, கவுண்டர்கள் வீட்டி லில்லாமையால் கவுண்டச்சிகளிடம் இழவு சொன்னார்கள். கவுண்டச்சிகள் வெளிக்குத் துக்கித்தவர்கள்போல் நடித்தார்களாயினும் மறைவாக ஒன்றுகூடி, 'அடியே அக்கா, ஒழிந்தான் பெரியவீட்டுக்காரன். இனி அந்தக் குடும்பம் வாழப்போகிறதா? ஒரு பையன் இருக்கிறான். ஒரு மரம் தோப்பாகுமா? அவனுக்கு ஒரு நோக்காடு வந்து படுக்கென்று போனாலும் தீர்ந்தது. அந்த வீட்டுச் சொத்து நமது கைக்குள்ளாயிற்று' என்று சொல்லி மகிழ்ந்து, வந்த ஆட்களுக்குச் சோறு போட்டார்கள். இதற்குள் உச்சிவேளையானதால் காடுகரை போயிருந்த கவுண்டர்களும் வீடுவந்து சேர்ந்தார்கள். மாதிகர் இழவு சொல்லக்கேட்டுப் பங்காளிகள் ஒன்றுகூடி யோசித்து எப்படியாயினும் பெரியவீட்டுக்காரன் சொத்தைக் கொண்டுவரவேண்டும் என்று முடிவுசெய்துகொண்டு, சாப்பாடுமுடித்து, மனைவியர்களையும் அழைத்துக் கொண்டு மாலைப்பொழுதில் சிற்றூலைப்பட்டணத்தை யடைந்தார்கள்.

அண்ணன்மார்கள் தம்பியைக் கண்டு கைமோதியழுதபின், 'தம்பி, அழாதே. நீ யொன்றும் பயப்படவேண்டாம், நாங்கள் இருக்கையில் உனக்குத் துணைபுரிகின்றோம்' என்று தம்பிக்கு ஆறுதல் சொன்னார்கள்.

பின்பு ஊரார் பங்காளிகளை நோக்கி, 'வேளையாகிறதே. செய்யவேண்டிய சீர் சிறப்புக்களையெல்லாம் செய்யுங்கள்' என்றனர். அதற்கு அவர்கள், 'இனிச் சீர்சிறப் பென்ன? வீணாகப் பணஞ் செலவழிப்பதேன்? சவத்துக்குக் கொஞ்சம் மஞ்சள் தெளித்துக் குழியிற்போட்டால் போதும்' என்றார்கள். இவர்களுடைய கொடுமைக்கு ஊரார்கள் அஞ்சி "நீங்கள் சொல்வது மெய்தான். ஆயினும் உங்

கள் பெரியப்பன் நன்றாக வாழ்ந்தவ னல்லனே. இக்காரியத்தில் பையனுடைய விருப்பத்தையும் அறிந்தே நாம் எதையுஞ் செய்யவேண்டும்' என்று சொல்லிக் குன்றுடையானைக் கூப்பிட்டு, 'அப்பா, உன்பெற்றோர்களை மஞ்சள்தெளித்து எடுத்துப் புதைப்பதே போதும்; வீணாகப் பணத்தை யேன் செலவுசெய்ய வேண்டும்; என்று உன் பங்காளிகள் சொல்லுகிறார்கள். உன் கருத்தென்ன; அவர்கள் விரும்பியது போலவே செய்வோமா?' என்று கேட்டார்கள். அதற்குப் பையன், 'பணம் போனால் போகிறது. என் பெற்றோர்களுக்குச் சகல சீர்சிறப்புக்களையுஞ் செய்து, நட்டுமுட்டு நாகசுரத்தோடு அவர்களை யெடுத்துக்கொண்டு போய்த் தகனஞ் செய்யவேண்டும்' என்று சொல்லி, ஒரேகாலில் நின்றான். அவன்கருத்தின்படியே ஊரார் வாச்சியகாரர்களை யழைக்கவே, பம்பையும் பறையும் வந்து வாசலில் முழங்கின. பங்காளிகளில் மூத்தான் மனைவி இறந்தவர்களுக்கு வாய்க்கரிசி சுற்றி, வலம்வந்து நின்றாள். மற்றைச் சீர்சிறப்புக்களும் நடந்தேறின.

மறுநாட் காலையில் பூந்தேர் சோடித்து, பிணங்களைக் குளிப்பாட்டி யலங்கரித்துத் தேரிலேற்றி, குன்றுடையானும் உறவினரும் அழுது தொடர்ந்துவரக் கொட்டுமுழக்குடன் மயானத்திற்குப் போய், சந்தனக் கட்டைகளையும் குங்குமக் கட்டைகளையும் சதுரமாய் அடுக்கிச் சவங்களைத் தகனம் பண்ணினார்கள். குன்றுடையான் பெற்றோர்களுக்குக் கொள்ளிவைத்துக் குடமுடைத்தான்.

அடுத்தநாள் கருமாதிகள் நடத்திக் கருப்புக்கழித்துச் சாப்பாடு தீர்த்தங்கள் முடித்துக்கொண்டு, மத்தியானம் சாவடியில் பத்துப்பெரியோர்கள் கூடி, குன்றுடையானையும் அவன் பங்காளிகளையும் வைத்துக்கொண்டு, "குன்றுடையானுக்கு இனி ஆதரவு என்ன" என்றார்கள்.

கூட்டத்தில் ஒருவர்—ஏன்! பங்காளிகள் இருக்கிறார்கள். அவர்கள் பையனை அழைத்துக்கொண்டு போய்ப் பாதுகாக்கிறார்கள். அவர்கள் இருக்கையில் பையனுக்குக் குறைவென்ன?

கூட்டத்தில் மற்றொருவர்—பிறந்த ஊரைவிட்டு, வீடு வாசலை விட்டுப் பங்காளிகள் வீட்டிற் போயிராவிட்டால் என்ன? இங்கேயே இருந்தால், நாமெல்லோரும் இருக்கிறோமே; பையன் பெரியவனாகும் வரையில் நாம் பார்த்துக்கொள்ளலாமே.

பங்காளிகள் (எழுந்து நின்று)—ஆனால் சரி, நாங்கள் போய்வருகிறோம். நீங்களே பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கள். எங்களுக்கில்லாத சொந்தம் உங்களுக்கு இகிருக்கிறதுபோல் தோன்றுகிறது.

கூட்டத்தில் மற்றொவர்—இருங்கள், இருங்கள். இப்படி ஆத்திரப்பட்டுக் கோபித்துக்கொள்ளலாமா? பெரியவீட்டுக் காரியம். எல்லோரும் நன்றாய் யோசித்துச் செய்யவேண்டியதன்றோ?

பங்காளிகள்—இல்லை யில்லை. நாங்கள் பேருக்குப் பங்காளிகள். நீங்கள் மெய்யாகவே பங்காளிகள். நீங்களே பையனைப் பார்த்துக்கொள்ளுங்கள். நாங்கள் பையனுக்குத் தீங்கு செய்துவிடுவோம்.

பங்காளிகளில் இளையான்—பையனை ஒழித்துவிட்டுப் பணத்தை அபகரிக்கலாம் என்ற எண்ணமிருந்தால் நாமேன் குறுக்கே நிற்கவேண்டும்? பையன் தலையெழுத்தின்படி நடக்கிறது. போவோம், வாருங்கள்.

கூட்டத்தில் மற்றொருவர்—நாங்களா அப்படிச் செய்ய எண்ணுகிறோம்? திருடனுக்குத் தோன்றும் திருட்டுப்புத்தி—அந்த எண்ணம் உங்களுக்கே இருக்கிறதுபோல் தோன்றுகிறது. கிரகத்தைப் பார். நல்லது செய்யப்போய்க் கெட்ட பேரா?

பங்காளிகள்—உங்களை யாரையா இந்தப் பேச்சுப் பேசச் சொன்னது? பையன் இருக்கிறான்; அவனைக் காப்பாற்ற, அவன் சொத்தைக் காப்பாற்ற, நாங்களிருக்கிறோம் பங்காளிகள். உங்களுக்கு இதில் என்ன சொந்தம்? இந்த நியாயம் பேச உங்களை யார் கூப்பிட்டது? உங்களுக்கு வேறு வேலை இருந்தாற் பாருங்கள். அழையா வீட்டுக்கு விருந்தாக வரவேண்டாம்"

என்று சொல்லிப் பங்காளிகள் கைகலக்கச் சித்தமாய் வேட்டிகளை வரிந்துடுத்தினார்கள்.

பங்காளிகள் சொன்னதைக் கேட்டு ஊரார் கோபங்கொண்டு, 'நமக்கு இந்த இழவேன்? நாம் இதில் தலையிட்டு ஏன் அவமான மடையவேண்டும்? பங்காளிக ளிருக்கிறார்கள், பார்த்துக்கொள்கிறார்கள். நமக்கிதில் என்ன பாத்தியம்? நடக்கிறபடி நடக்கட்டும்' என்று சொல்லிக் கூட்டத்தை விட்டு எழுந்துபோயினர். அவர்களிலே வயதுமுதிர்ந்த கிழவர் ஒருவர் சிறிது தூரஞ் சென்று, திரும்பிப்பார்த்து, பிள்ளையை வளர்த்து வாலிபம்பண்ணி ஒரு கலியாணத்தைச் செய்து பக்கத்தில் வையுங்களப்பா. பெரிய வீட்டுக்காரனுக்குக் குற்றம் பண்ணுவீர்களானால் அது உங்கள் குடும்பத்துக்கே கேடாய் முடியும்' என்று சொல்லி மீண்டும் நடந்தார்.

பின்பு பங்காளிகள் குன்றுடையானை அரண்மனைக்கிட்டுக்கொண்டுபோய்த், 'தம்பி, நாங்களிருக்கிறோம் உனக்கு ஆதரவாக. உனக்கு ஒரு குறைவுமில்லை. நீ இங்கே இருந்தால் ஊரார்கள் உன்னைக் கொன்று உன் பணத்தைத் திருடிக்கொள்வார்கள். எங்களுக்குகில்லாத அக்கரை ஊராருக்கு உண்டா? வா, நமது ஊருக்குப் போகலாம். அங்கே நீ நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டு விளையாடிக்கொண்டிருக்கலாம். உன் அண்ணியர்கள் உன்னைப் பிரியமாக நடத்துவார்கள். உன் சொத்தைக் காப்பாற்றி நீ பெரியவனான பின் உனக்கு விவாகஞ்செய்து உன் உடைமையை உனக்கே திரும்பக் கொடுத்துவிடுகிறோம்' என்று நயவார்த்தை பேசினார்கள். "நீங்கள் சொல்கிறபடியே நான் நடக்கிறேன்' என்றான் குன்றுடையான்.

மீண்டும் பங்காளிகள், 'அப்பா' நீ திரும்பிவருகிற வரையில் உன் வீடுவாசல் இப்படியே இருக்கட்டும். உன் தகப்பனார் சேர்த்துவைத்த பணத்தையும் நகைகளையும்பாய்ச்சலூருக்குளடுத்துக்கொண்டுபோவோம். ஊருக்குப் போய் உன் நிலங்களைச் சாகுபடிசெய்யத் தக்கவர்களை நியமிப்போம்' என்றார்கள். சூதறியாத குன்றுடையானும் இசைந்தான்.

பங்காளிகள் பெரியப்பனுடைய சொத்தில் எடுக்கத்தக்கவற்றை யெல்லாம் வாரி மூட்டைகட்டி, ஆடு மாடுகளைத் தங்கள் ஊருக்கு ஓட்டியனுப்பிக் குன்றுடையானை அழைத்துக்கொண்டு வெள்ளிக்கிழமை யன்று பாய்ச்சலூரைநோக்கிப் புறப்பட்டார்கள்.



வெள்ளிக்கிழமை யன்று ஊரைவிட்டுக் குன்றுடையான் போதலைக் கண்டு ஊரார் "ஐயோ! நல்ல நாளில் வீட்டைவிட்டுப் போகிறானே! குழந்தைக்குத் துன்பம் நேரிடுமே' என்று அங்கலாய்த்தனர். குழந்தைகளைப் பெற்ற பெண்டிரிற் சிலர் அவனது நடையையும் வஞ்சமற்ற முகத்தையும் முன்னும் பின்னும் பார்த்துநின்று கண்ணீர் சொரிந்தனர். 'அவன் பிறந்த அருமை யென்ன, அவன் வளர்ந்த அருமை யென்ன. அவனுக்கு நேர்ந்த கதியென்ன' என்று சொல்லி நெட்டுயிர்த்தாள் ஒருத்தி. 'பங்காளிகள் பாவிகளாமே, குழந்தைக்கு என்ன தீங்கு நேரிடுமோ?' என்று நைந்தாள் மற்றொருத்தி 'ஐயோ! அந்த முண்டைகள் பேய்களாமே, அவர்கள் குழந்தையை உயிரோடு வைத்திருப்பார்களா?' என்று இரங்கினாள் மற்றொருத்தி; 'அடபோ, கடவுளுக்குக் கண்ணில்லை?' என்றாள் மற்றொருத்தி.

## கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[4-வது வால்யூம் 985-வது பக்கத் தொடர்ச்சி]

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் நந்தஞ் செந்தமிழ் மொழியின் பெருமையைச் சிவபிரானோடும் அப்பெருமான்றன் திருக்குமாரராகிய குமரவேளுடனுந் தொடர்புபடுத்திக் கூறியுள்ள இடத்தை யினி யெழுதத் தொடங்குவாம்.

சூரபன்மனது அளவற்ற சேனைகள் முழுமையும் செவ்வொளி பொருந்திய திருமேனியினையுடைய குமரப் பெருமான் செய்த ஒரு உங்காரத் தொனியினால் வெவ்விய தூளாகுதலும், மேலண்டத்தினின்ற யானையும் குதிரையும் இரதமும் அசுரசேனையும் ஆரவாரஞ் செய்துகொண்டுவந்து அருகிற் சூழ்ந்து நிற்ப, அதனை, வரம்பறு பெருங்குணத்து வள்ளலாகிய குமரப்பெருமான் பார்த்த உடனே விடுத்தருளிய படைகளெல்லாம் பல கோடிக்கணக்கான ஒளிபொருந்திய சூரியர்களையும் அக்கினிகளையும் அரவங்களையும் போல வடிவங்கொண்டு பகைவனுடைய சேனையாக அவணிருந்தவற்றை யிமையளவிற்கு முன்னரே கொன்று மிக்க வெற்றியைப் படைத்தன. அச்சமயத்து,

[மாற்று

திருத்தமிழ் மதுரை தன்னிற் சிவன்பொருணிறக்கு
னுருத்திர சரும னாகி யுற்றிடு நிமலன் வெம்போ
ரருத்திகொள் கணிச்சி சூல மாழிதண் டெழுவ தாகுங்
கரத்தினிற் படைக டம்மை நோக்கியே கழறலுற்றான்'

வென்றியம் படைகாள் கேண்மோ
விரைந்துடன் றழுவி நம்பாற்
சென்றிடு மனிகந் தன்னைச்
சென்னெறி பெரும லப்பா
னின்றிடு படையை யெல்லா
நீவிர்பல் லுருக்கொண் டேகிக்
கொன்றிவண் வருதி ரென்று
கூறியற் றிவற்றைத் தொட்டான்

என்ற இவ்வினிய பாசுரங்களை நம் புலவர்பெருமான் அருளிச்செய்துள்ளார்.

[மேன்மையாகிய தமிழ் வளர்வதற்குரிய மதுரையம்பதிக்கண் சிவபெருமானால் அருளிச்செய்யப்பெற்ற 'இறையனா ரகப்பொரு' ளினது (சங்கப்புலவரா லியற்றப்பட்ட) உரையை உண்மையளந்து காணுமாறு உருத்திரசருமனாக அவதாரஞ் செய்த புனிதனாகிய குமரப்பெருமான் வெவ்விய போர் நிமித்தமாகத் தனது கரத்தின்கண் உள்ள மழு, சூலம், சக்கரம், தண்டம் எழு (இருப்புத்தூணை நிகர்த்த ஆயுதம்) ஆகிய படைகளை நோக்கிப் பின்வருமாறு உரைப்பானாயினான்]

[வெற்றி பொருந்திய ஆயுதங்களே, கேளுங்கள்; விரைவாக ஒருகூட்ட மிறந்துபட்டவுடனே பின்னும் முன்னிருந்தன போலவே நம்மிடத்திற்கு வாராநிற்கின்ற சேனைகள் இன்னொருமுறை நம்மிடத்தி லடையாத நெறியையுடையனவாக நீங்கள் பல உருவங்களைக் கொண்டு சென்று மறு அண்டங்களில் நிற்கின்ற சேனைகளனைத்தையுங் கொலைபுரிந்து பின்னர் இவ்விடத்திற்கு வாருங்களென்று திருவாய்மலர்ந்தருளி, அவ்வாயுதங்களை விடுத்தருளினான்]

முதற்செய்யுளில் நந்தந் தெய்வத் தீந்தமிழ்க்குத் 'திரு' என்ற அடைகொடுத்து அது வளர்ந்த இடங்கள் பலவிருக்கப் பாண்டிய நாட்டரசிருக்கை நகராகிய மதுரையையே சண்டுசுச் வாமிகள் குறிப்பித்தருளினார்கள். பொருளிலக்கணம் சிவபிரானுடைய அழியாச் சொத்தென்றும், அஃது அப்பெருமானாலே 'இறையனாரகப்பொருள்' என்னும் பெயராலே செய்து உலகிற்குத் தரப்பட்டதென்றும், அதற்குஉரைகண்ட கடைச்சங்கப் புலவர் யாவரினும் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்ட உரையே திருத்தமானதெனக் காட்டும்பொருட்டுத் தமிழ்த்தெய்வம் சண்முகப்பெருமானார் உருத்திரசருமரெனத் திருநாமந்தரித்து அவதரித்தருளினா ரெனவும் விவரமான இச் செய்திகளை இப்பாசுரத்து நம் கவிப்பெருமான் திருவாய்மலர்ந் தருளியிருக்கின்றார்கள்.

'திரு' என்பது அழகு, மேன்மை, உயர்வு, மங்கலம், திருமகள், ஆகிய பலபொருள்களை யுணர்த்தும் ஓர் இயற்சொல்லாம். தமிழ்மொழிக்கு இக்குணங்களெல்லாம்ஒருங்கே அமைந்திருத்தலின், இவ்விடத்து இவ் வடைகொடுத்துக் கூறியது பெரிதும் பொருத்தமேயாம். 'தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே,' 'தமிழ் தழீய சாயலவர்' என்ற இடங்களில் தமிழென்னும் மொழி, இனிமை யென்னும் பொருளில் வருவதால் இதற்கியல்பிலேயே இனிமை யென்னும் விழுமிய குணமிருத்தல் காணலாம். மற்றும் 'தமிழ்' என்னும் சொல்லில் முதலெழுத்து வல்லினமும் இரண்டாமெழுத்து மெல்லினமும், மூன்றாமெழுத்து இடையினமுமாதல் காண்க. இந்த மூவோசையுங் கலந்து வருமிடத்துப் பிறக்கும் ஒலி செவ்விய இன்பம் பயக்கும் வகையை யனுபவத்தால் ஒவ்வொருவரும் அறியலாம். வல்லினமேயாக மெல்லினமேயாக ஏனையிடையினமேயாகத் தனித்துக் கவிகளில் வரும் எழுத்துக்கள் கூட்டுமொழியாற் பிறக்கு மோசையின்பத்தினும், இவையனைத்தும் விரவிவரப்பெற்ற பாசுர வின்பமே பேரின்பம் ஊட்டுவதென்பது நன்கறிந்ததொன்றாம். இதனால், செயற்கையாலும் தன்னையோதுவார்க்கு இஃது இன்பமளிக்குமாறு கூறப்பட்டது. ஏனை மொழிகளிலில்லாத ழகரத்தைத் தானுடையதாகலின்

இணையற்ற மொழியென்பதும் போதரும்! இங்ஙனம் தன்னைக் காண்பார்க்கும், ஓதுவார்க்கும், கேட்பார்க்கும் விழுமிய வின்பம்பயக்கவல்ல பேரழகினை யிஃது உடையதாயிருத்தலை யறிக.

இட்ட ஏட்டினி லெழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்டமூர்த்தியைப்பொருளெனவுடைமையாலமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே'

என்ற பெரியபுர்ராணப் பாசுரத்தால் இத்தமிழ்மொழியின்என்றுமழியாத உயர்வின் திறம்இனிதுவிளங்கும்.

சிவபிரான் தீவண்ணராய்ப் புனிதராய் விளங்குவது போல இம்மொழியுந் தீயின்கண் இடப்பட்டும் அழியாது புனிதமாய் விளங்கிய பான்மை கவனித்தக்கதாம். தன்னை யடைந்தாரது பாசங்களை யறவே சுட்டெரித்துத் தன்னிடத்துள்ள பேரருளைச் சிவபரஞ்சுடர் வழங்குமாறுபோலவே இவ்வொளியினையுடைய மொழியும் தன்னை யடைபவரது அகவிருளைத் தன் ஞானவிடயங்களாற் போக்கித் தூய்மைப்படுத்தி யவர்களை வீடுபேறடைவிக்கும் பான்மையதா யிருத்தலை நோக்கி யறிக.

தமிழ்நூற்பய னிதுவேயாதலைத் திருக்குறளாலும் ஏனைய சமய ஞான நூல்களாலு முணரலாம். 'அறம் பொரு ளின்பம் வீடடைத னூற்பயனே' என்பது சூத்திரம். இதற்கு இலக்கியமாகச் சிறந்த தமிழ்நூல்கள் இருத்தலைக் காணலாம். என்று மழியாதிருக்கும் சிறந்த பொருளே மங்கலப் பொருளென வழங்குதற்குப் பெரிதும் உரியதாகும். அத்தன்மை தமிழினிடத்துளதாதலின் இது நித்தியமங்கலப் பொருளாய் வீற்றிருத்தல்காணத்தக்கதாம். சிறந்தபொருளாயிருப்பது பரம்பொருளாகிய கடவுட் பொருளே. சிவபிரான், முருகவேள், திருமால் ஆதிய சிறந்த கடவுளரையும் இம்மொழி ஏவல் கொண்டிருத்தலின் இதனுடைய உயர்தனிப் பெருமையையும் சிறப்பையும் எவ்வா றளவிட் டுரைக்கவல்லேம் !

எண்ணிறந்த தமிழ்ப்புலவர்கள் தாம்தாம் விரும்பியவற்றை இக்கடவுளரைத் தமிழ்ப்பாடல் மூலமாகப் பாடி நிறைவேற்றிக்கொண்டமையேயிதற்குஏற்றஉதாரணமாம். "மதுரை தன்னில் சிவன்பொருணிறுக்கு மாற்ற லுருத்திரசருமனுகி யுற்றிடு நிமலன்' என்றார். முச்சங்க மிருந்த இடம் மதுரையாதலாலும் இத்தொடர்களில் கூறப்பட்டநிகழ்ச்சி நிகழ்ந்தது கடைச்சங்க காலத்தில் இப்பதியிலேயே யாதலாலும் 'மதுரை தன்னில்' என்றார். மற்று மிந்நகரத்தின் பெருமையை,

உலகம் யாவையு மீன்றவ ளும்பரு ளுயர்ந்த
திலக நாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவ ரான்முறை செய்தநா டிஃதன்றிச் சலதி
சுலவு பாரினுண் டாகுமோ துறக்கத்து மஃதே

(திருவிளையாடற் புராணம், நாட்டுப்படலம் 60)
எனப் பரஞ்சோதிமுனிவர் கூறியருளினர்.

[உலகங்களெல்லாவற்றையும் பெற்றருளியவளாகிய தேவமாதர்களுக்குள் உயர்ந்த திலகம்போற் கருதப்பட்டவளாகிய தலைவியாய உமையம்மை, மேலாகிய சுடர்ப் பிழம்பாகிய பரமசிவன், முருகக்கடவுள் என்று மூன்றாகிய தலைமைக் கடவுளர்களால் முறையாகச் சீர்திருத்தம்செய்து அரசாளப்பட்ட நகரம் இம் மதுரையாம்' (தன் னொப்பு முயர்வு மில்லாது) இஃதொன்றே சிறியதன்றிக் கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகின்கண் இதற்கு நிகராகப் பிறிதொரு நகரம் உண்டாகுமோ ? (இல்லையென்றபடி). (இதற்கு நிகரான நகரம், இம்மண் உலகில் இல்லையாதலன்றி, மேலுலகத்தின்கண் உண்டென்பாருளராயின் அவர் கூற்று அவலமேயாம்) ஏனைத் துறக்கஉலகத்தும் அவ்வாறேயாம்]

'பாரினுண்டோ' என்றது 'உண்டாகுமோ' என்றார் ; முக்காலத்தினும் இதற்கீடான நகர் வேறு இல்லையென்றற்கு. மேலுலகின்கண் உளரென்பரேல் அவர் மொழி வெற்றுரையேயாம். ஆண்டு மில்லையெனற்குத் துறக்கத்து மஃதே யென்றார். எனவே 'மூவுலகத்தும் முக்காலத்தினும் இதற்கு நிகர் வேறில்லையென்றவாறாயிற்று. இக்கருத்தை யப்படியே யெடுத்துக்கொண்டு தமிழ்மணத்தைக் கொள்ளைகொள்வான் வேண்டி மேலே குறித்த மூன்று தலைவர்களும் முறையே தடாதகைப்பிராட்டியார், சுந்தர பாண்டியர், உக்கிர குமார பாண்டியர் எனத் திரு அவதரித்து மதுரையரசு புரிந்தார்களென்றால் இப்பதியின்மகிமையையும் தமிழின் பெருமையையும் யாவரே அளவிட்டுரைக்க வல்லார்' என்ற கருத்துத் தோன்ற மதுரைக் கலம்பகத்துச் சைவப்பெரியாராகிய குமர குருபர சுவாமிகள் சுவை சொட்டச்சொட்ட அடியில்வரும் பாசுரத்தை யருளிச்செய்திருக்கிறார்:—

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ற
டடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவுங்,
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்

பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றாநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே.

(மதுரைக்கலம்பகம் செய்யுள் 92)

வெளிவந்து விட்டது ! சென்ற நான்கு வருடகாலமாய் எதிர்பார்க்கப்பட்ட புதுமையான நாவல் !! வெளிவந்து விட்டது !!!

தென் இந்திய நாவல் உலகத்து முடிசூடாச் சக்கரவர்த்தியாகிய நிகரற்ற நாவலாசிரியர்

வடூவூர், கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

**துரைக்கண்ணம்மாள் அல்லது திரிசங்கு சாஸ்திரியார்.**

என்னும் புதுமையான நாவல் வெளிவந்துவிட்டது. இவ்வொப்புயர்வற்ற நாவலை வெறும் வார்த்தைகளால் புகழ்ந்து எழுத முடியாதென்பது நிச்சயம். பிரமிக்கும்படியான அநேக சித்திரப்படங்கள் அடங்கியது—450 பக்கங்கள் கொண்டது. (தபால் செலவு அணா 7) விலை ரூபா **2 4 0.**

V. S. T. சாமி அண்டு கம்பெனி, வேப்பேரி, மதராஸ்.



# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

### தோற்றுவாய்

உலகுள்ளளவும் வளரும் புகழுடன், ஆற்றல்சால் அறிவிலும், அலகிலாக் கலையிலும், கற்பனையின் அற்புதத்திலும், உன்ன உன்ன உவகை சுரக்கும் சொன்னயத்திலும் யாரே இவர்க்கிணை என்று, காலத்தால் இடத்தால் மொழியினால் வேறுபட்டாரும் மாறுபாடின்றிப் போற்றிவருதற்கு உரியராய ஒருதனி மேன்மையெய்தித் திகழ்கின்ற ஆங்கிலக் கவியரசு வில்லியம் ஷேக்ஸ்பியர் இற்றைக்கோர் முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்து வரைந்த முப்பத்தேழு நாடகங்களுள் ஒன்றாகிய "ஜூலியஸ் ஸீஸர்" கட்டுக்கதை யாகாமல்,இட்டாலி தேசத்திலுள்ளரோம் நகரத்தின் சரித்திரத்தைச் சார்ந்த உண்மை நிகழ்ச்சியொன்றை நம்முன் நடித்துக் காட்டுகின்றது. அந்நிகழ்ச்சியின் வரலாறுகளையும் நிகழும் பாத்திரங்களையும் ஷேக்ஸ்பியர்,சரித்திர நூல்களிலிருந்து முற்றிலும் எடுத்து அமைத்துக்கொண்டாராயினும், அவைதாம் அவரது வளப்பம்மிகுந்த மனத்தின் ஊடுருவி இந்நாடக உருவமாய் வெளிவரும்போது விலைமதிப்பரிய கலைமணம்பூசப்பெற்றுப்புதியதோர்ஒளியோடும் சுவையோடும் உணர்வினோடும் மறுபிறப்படைந்து பொலிகின்றன. காலம் இடம் என்னும் எல்லைகளில் அவ்வப்போது நிகழ்ந்துமடிகின்ற சரித்திரச் செய்திகளை ஷேக்ஸ்பியர் நிரந்தரமான நிச்சயத்தில் நிற்கச்செய்துவிட்டார்.இச்சரித்திரத்தலைவனான ஜூலியஸ்ஸீஸரை இரண்டாயிரம் வருடங்களும் ஐயாயிரம் மைல்களும் இன்று நம்மினின்று பிரிக்கின்றன. எனினும், இந்நாடகத்தை இழைக்கின்ற மானததத்துவமும் மாநுட இயற்கையும், அன்றைக்கும் இன்றைக்கும் இனி வரும் பெருங்காலத்தில் என்றைக்கும் திரியாத உண்மையில் தோய்ந்திருத்தலால் இதன்கண் நிகழ்கின்ற செய்கைகளும் சொற்களும் நம்முடைய உள்ளத்தைத் துருவித்துருவி அங்கு நமக்கேயுந் தெரியாமல் உறங்கிக்கிடக்கின்ற இரகசியத்தை வெளிக்கொணர்ந்து நம்மையே நம்கண்முன் நடித்துக் காட்டிவிடுகின்றன. ஷேக்ஸ்பியர் நாடகங்களை மேனோக்காகப் படிப்பவர்களும் பார்ப்பவர்களும், அழுகின்ற பாத்திரங்களோடு தாமும்அழுவார்;சிரிக்கின்ற பாத்திரங்களோடுதாமுஞ் சிரிப்பார். இன்னும் சற்று ஊன்றிக்கருதுபவர் அவ்வழுகைக்குஞ் சிரிப்பிற்கும் ஆதாரமாய அமைப்பின் திறத்தைச் சிந்தித்து வியப்பெய்துவார். அந்நாடகங்களின் ஆழத்தில் முழுகி எழுகின்றவர், அவ்வழுகைக்கும் சிரிப்பிற்கும் அப்பாலாய மூலத்தின் மெய்ம்மையை எய்தி, இன்பதுன்பங்களென்பவை ஒன்றேயாயினும் இரண்டென்று காணும் இம் மாயத்தோற்றத்தில் அழுகையினுள் சிரிப்பதற்குரியவைகளையும் சிரிப்பினூடு அழுதற்கொத்தவைகளையுங் காணவல்ல ஆற்றலை அரிதிற்பெற்று, இன்பத்திற்குத் துன்புறாமலும் துன்பத்திற்குத் தோற்காமலும் அசையா நடுநிலை நிற்கும் நீர்மையைச் சேர்ந்தவராவார். அளப்பரிய இப்பெரும்பயனை உளப்படுத்தியன்றோ, "இந்தியப் பேரரசு இருந்தாலும் இருக்கட்டும் ஒழிந்தாலும் ஒழியட்டும். அது ஒரு பொருளில்லை. நம்முடைய ஷேக்ஸ்பியரை மாத்திரம் நாம் ஒருநாளும் விடமாட்டோம்'' என்று தாமஸ் கார்லைல் என்னும் ஆங்கில அறிஞர் அறுபது ஆண்டுகளுக்குமுன் தம் திருவாய்நிறையத் திண்ணமாய் விளம்பினர்.

* * *

'ஜூலியஸ் ஸீஸர்' நாடகம் செவ்விதின் விளங்குவதற்குஉரோமர்களின் முன்னையசரித்திரத்தைச் சிறிது தெரிந்துகொள்ளல் வேண்டும். இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் உரோமர்கள் செல்வமும் வெற்றியும் சிறக்க அநேக நாடுகளைத் தம் ஆட்சியுள் அடக்கிப்பெருகுவதற்குக் காரணமாயிருந்தபேராற்றல் போர்வீரர்களில் முதற்பெருமை வாய்ந்த ஜூலியஸ் ஸீஸர் இந்நாடகத்திற்குத் தலைவன் ஆகின்றான். அக்காலத்து ரோமாபுரியின் அரசியல் இக்கால அமரிக்கர் குடியரசு முறையை ஒருவாறு ஒத்திருந்தது. அரசன் இல்லை. கல்வி செல்வம் குடிப்பிறப்பு முதலியவைகளில் உயர்ந்தவர்களால் அமைந்த சேனட் என்னும் சபையாரிடத்தில் ஆட்சியதிகாரம் தங்கியிருந்தது. இச் சபையினர் ஆட்சித்தலைவர் (Consuls) ஒருவர் அல்லது இருவரைத் தம் மினத்தவரிலிருந்து ஆண்டுதோறுந் தேர்ந்தெடுத்து, அவ்வாட்சியைச் செலுத்தும் அதிகாரத்தை அவர்களுக்கு அளித்து வைப்பார்.இத்தலைவர், சபையினரோடு கலந்து ஆலோசித்து ஆட்சியை நடத்தவேண்டுமென்பது முறை.

செனட் சபையினர்களும் ஆட்சித்தலைவர்களும் மேல்வகுப்பைச் சேர்ந்தவர். இவர் தங்கள் சுயநலமே கருதித் தம் அதிகாரங்களை உபயோகித்தனர் என்றும் பொதுஜனங்களுக்குப் பலவித துன்பங்களைச்செய்து வந்தனரென்றும் சரித்திரம் கூறுகின்றது. இதுபற்றி ஜூலியஸ் ஸீஸரின் காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் முன்னரிருந்தே பொதுஜனங்களுக்கும் மேல்வகுப்பினர்களுக்கும் மாறுபாடு உண்டாகிப் புரிந்த பற்பல போராட்டங்களின்முடிவாய்ப் பொதுஜனப் பிரதிநிதிகள் சிலரை,(Tribunes) அவ்வப்பொழுது ஜனங்களே தேர்ந்தெடுத்துத் தங்களுடைய நன்மைகளையும் உரிமைகளையுங் காக்கும்பொருட்டு அமைக்கவேண்டும் என்னும் முறைமை ஏற்பட்டது. (பிறகு, இப் பொதுஜனப்பிரதிநிதிகளாய் நியமிக்கத்தக்கவர்க்கும் அப் பொதுஜனங்களுக்குமே மாறுபாடு உண்டாகியது. எனினும் அந்தச் சரித்திரத்தைத் தொடர்ந்துசொல்ல வேண்டிய அவசியம் இங்கில்லை.)

ஸீஸர் மேல்வகுப்பைச் சேர்ந்தவன். அவன் பல தேயங்களைச் சயித்து வெற்றியுடன் மீளவும்,அவனைச் செனட் சபையினர் ரோமாபுரியின் ஆட்சித்தலைவன் ஆக்கினர். அக்காலம், ஸீஸரின் மகள் ஜூலியாஎன்பவளை மணங்கொண்டவனும், ஆற்றல் மிக உடையவனும், கடும்போர் பல தொலைத்த கீர்த்தியுடையவனுமான பாம்பே என்பவன் எல்லோராலும் 'மகா பாம்பே' என்று சிறப்பித்து அழைக்கபடுவதற் குரியவனாய் விளங்கினான். இந்தப் பாம்பேயினுடனும் க்ரேஸஸ் என்னும் மற்றொருவனுடனும் ஜூலியஸ் ஸீஸர் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். இதன்படி, இம்மூவரும் ஒவ்வாமல் ஒரு காரியமும்

செய்யலாகாதென்றும், வென்று அடக்கியுள அயல்நாடுகளின் ஆட்சியை இம்மூவரும் தம்முள் பகிர்ந்துகொள்வதென்றும் ஏற்பாடு செய்துகொண்டனர். ஸிரியா என்னுந் தேயத்தை க்ரேஸஸ் எடுத்துக்கொண்டான். பாம்பே, ரோமாபுரியின் அதிகாரத்தோடு ஸ்பெயின் தேசத்தையும் தனக்கென்று வைத்துக்கொண்டான். கால், என்னும் மாகாணம் ஸீஸரின் பங்காயிற்று.

ஸீஸர் ஒன்பது வருஷகாலம் புரிந்த பல பெரும் போர்களில் வென்றுவென்று பெற்ற புகழின் பெருக்கைக் கண்டு பொறாமைகொண்ட பாம்பே, கால் மாகாணத்தின் ஆட்சியினின்று ஸீஸரை நீக்கிவிட்டான். ஜூலியஸ் ஸீஸர் உடனே தன் படைகளைத் திரட்டிக்கொண்டு பாம்பேயின் மீது போர்தொடுக்க உரோமாபுரிக்கு வருதலும், பாம்பே அவனை எதிர்க்க அஞ்சித் தன் சைன்னியத்துடன் கிரீஸ் தேயத்திற்கு ஓடிவிட்டான். ஸீஸர் உரோமபுரி வந்து முக்கிய அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டனன். மார்க் ஆண்டனி, கேயஸ் காஸியஸ், போன்ற செல்வாக்குடைய பெருமக்கள் பலர் ஜூலியஸ் ஸீஸரின் திறத்தில் சேர்ந்தனர். இதன்பின் ஸீஸர், முதலில், பாம்பேயின் பாகமாயிருந்த ஸ்பேயினிற்குச்சென்று அதனைத் தன்வசப்படுத்தித் திரும்பினன். அப்பொழுது செனட் சபையினர் அவனை ஒரு வருடகாலத்திற்குச் சர்வாதிகாரி (Dictator) ஆக்கினர். பிறகு, கிரீஸ் தேயத்தில் புகுந்து தன் சைன்னியத்தை வலிவுசெய்துகொண்டிருந்த பாம்பேயின்மீது படையெடுத்துச்சென்று புரிந்தவோர் கடும்போரில் ஸீஸர், பாம்பேயின் படையை முற்றிலும் முறித்துவிட்டான். அதன்மேல், தன் மனையாள் கார்னீலியா என்பவளோடும் உயிர்தப்பியோடி ஈஜிப்ட் தேயத்தில் தஞ்சம்புகுந்த பாம்பே, தன் பழைய படைஞன் ஒருவன் செய்த சதிக்கொலைக்கு ஆளாகி மாய்ந்தனன். அவன் மாண்டது தெரியாமல் ஈஜிப்ட்டிற்குத் தொடர்ந்து சென்ற ஜூலியஸ் ஸீஸர், அத்தேயத்தையும் உரோமாபுரியின் ஆட்சியினுள் அடக்கி மீண்ட பின் அவனைச் செனட் சபையினர் அவன் ஆயுள்வரையிலும் சர்வாதிகாரியாகஇருக்கும்படி நியமித்தனர்.

பிறநாட்டுப் பகைவர்களாலேனும், உரோமர்களே ஒருவருக்கொருவர் விரோதமாகச் செய்யும் புரட்சிக் குழப்பப்போராட்டங்களாலேனும் தம்தேயத்திற்குப் பெரிய ஆபத்துக்கள் நேரிட நிற்குந்தறுவாயில், நகரத்தையும் சனங்களையும் அவ்வாபத்தினின்று காப்பாற்றும்பொருட்டு ஆற்றல்மிகுந்தஒருவனைச் செனட்சபையினர் சர்வாதிகாரியாக்கி எல்லா அதிகாரங்களையும், ஆபத்துத் தீரும்வரையில், அவனே தனக்குத் தக்கதென்று தோன்றியவாறு நடத்தும்படி அவனுக்குக் கொடுத்துவைப்பதுண்டு.

இதற்கிடையில், பாம்பேயின் புத்திரர் இருவர் ஸீஸருக்கு விரோதமாகப் படைதிரட்டிக்கொண்டிருந்தனர். ஈஜிப்டிலிருந்து திரும்பியவுடன் ஸீஸர் அவர்களை எதிர்த்துச்சென்று முண்டா என்னும் இடத்தில் பொருது கொன்றனன்.

இந்தப் போரிலிருந்து மீண்டு வெற்றிக்கோலத்துடன் ஸீஸர் உரோமாபுரியில் நுழைவதிலிருந்து இந் நாடகம் துவக்குகின்றது.

## அங்கம் 1. களம் 1.

இடம்:—உரோமாபுரியில் ஒரு வீதி.

ப்ளேவியஸ் மரூல்லஸ் என்னும் பொதுஜனப் பிரதிநிதிகள் இருவர் ஒருபுறம்வரச் சனங்கள் கும்பலாய் எதிர் வருகின்றனர்.

### நூல்

ப்ளேவியஸ்:—போங்கள் வீட்டிற்கு. ஏ சோம்பேறிகளே வீட்டிற்குப் போய்ச்சேருங்கள். விடுமுறை நாளா இது? ஓகோ! தொழிலாளர்களா யிருப்பதால், வேலைநாட்களில், தொழிலிற்குரிய அடையாளங்களைத் தரிக்காமல் வெளியே நடக்கப்படாதென்பது தெரியாதோ உங்களுக்கு! (1)—(ஒருவனைப் பார்த்து) சொல் —உன் தொழில் யாது?

முதல் நகரவாசி:—ஏனையா—தச்சன்.

மரூல்லஸ்:—உன் தோற்போர்வையும் மட்டப்பலகையும் எங்கே? உன் ஆடைகளிற் சிறந்ததையுடுத்து என்ன செய்கின்றாய்?—(மற்றொருவனைப் பார்த்து) நீதான் ஐயா, உன் தொழில் என்ன?

இரண்டாம் நகரவாசி:—மெய்யாக, ஐயா நல்லவேலைக்காரர்களோடு ஒப்புநோக்கினால், என்னை வெறுந் தோலான் என்றுதான் சொல்வீர்கள் (2)

மரூ:—கிடக்கட்டும். உன் தொழிலென்ன? நேராக எனக்குப் பதிற்சொல்.

இர-ந-வாசி:—என் தொழில் மனச்சாக்ஷிக்குப் பாதகமில்லாமல் நடத்தக்கூடிய தொன்றென்றே நம்புகின்றேன்—பதஞ்சேரும் இரக்ஷை செய்பவன் யான். (3)

மரூ:—என்ன தொழில் அது படலே? ஏ போக்கிரிப் பயலே என்ன தொழில் அது?

### குறிப்புரை

ப்ளேவியஸும் மரூல்லஸும் ஜனங்களின் சார்பாய் அவர்களது நன்மைகளையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுஜனப் பிரதிநிதி அதிகாரிகள்.

(1) இந்தச்சட்டம் இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர்காலத்தில் இருந்ததேயன்றி உரோமாபுரியில் எப்பொழுதும் இருந்ததில்லை. ஷேக்ஸ்பியர் இப்படி இடம்பிறழ்ந்து பிழைப்பதுண்டு. எனினும் அதனால் நாடகத்தின் சிறப்பிற்கு யாதும் இழுக்கில்லை.

(2) இவன் தொழில் செருப்புத் தைத்தல். பெரிய வாயாடி. தோலான், என்பது சாதாரண வழக்கில் ஒரு இழிவுச்சொல் லாகின்றது. எனினும் தோலில் வேலை செய்பவன்என்று பொருள்படும்படி இங்குச்சிலேடையாக உபயோகிக்கின்றான்.

(3) மீண்டும் சிலேடை. பாதரக்ஷை செய்பவன், என்னுது பதம் சேரும் இரக்ஷை செய்பவன் என்கின்றான். ‘பாதம்’ என்பதைப் ‘பதம்’ எனக்குறுக்கினான். இதனால் ‘நற்பதம் சேரும்படி இரக்ஷிப்பவன்’ என்னும் பொருள் தோன்றுகின்றது. இது உயர்ந்த காரியமாதலின், மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடத்தக்கூடிய தொழில் என்பது பொருத்தமுடையதாகின்றது.



இர-ந-வாசி:—வேண்டாமையா, வேண்டுகின்றேன். என்மேல் வெடிக்காதீர். இருப்பினும், நீர் வெடித்தால், ஐயா, நான் உம்மையும் திருத்தவல்லேன். (4)

மரூ:—என்னடா பேசுகின்றாய்? ஏ துஷ்டப்பயலே, என்னைத் திருத்துவாயா?

இர-ந-வாசி :—ஏனையா! சரிப்பட்டாலென்ன, செருப்பிட்டாலென்ன?—ஒன்றுதானே.

ப்ளேவி:—செருப்புத் தைப்பவன் நீ, அல்லையோ?

இர-ந-வாசி:—ஐயா, வாஸ்தவமாக நான் பிழைப்பதெல்லாம் செருப்பினாலே. ஆண் தொழிலாளர் விஷயத்திலாகிலும் பெண்கள் விஷயத்திலாகிலும் நான் கைவைப்பதில்லை. எனினும், எல்லாரும் என் கைத் தொழிலில் காலிடுகின்றனர். (5). பழஞ் செருப்புக்கெல்லாம், ஐயா, வைத்தியன் நான். அவை பெரிய ஆபத்தடைந்து வாறிப்போடும் தறுவாயில் நான் வாரைப்போட்டுக் காப்பாற்றுவேன். மாட்டுத்தோலை மிதிக்கின்ற தகுந்த மனிதர் அனைவரும் என் கை வேலையின்மேல் போகின்றவர்களே (6).

ப்ளேவி:—எனின், இன்றைக்கு நீ உன் கடையில் இல்லாமல் வந்துவிட்டது ஏன்? ஏன் இவர்களைத் தெருத்தெருவாகஇழுத்துக்கொண்டு திரிகின்றாய்?

இர-ந-வாசி :—மெய்யாக, ஐயா, அவர்களுடைய செருப்பைத் தேய்த்து எனக்கு அதிகவேலை ஆகப்படுவதற்காக. (7). ஆயினும், உண்மையில், ஸீஸரைக்கண்டு அவருடைய வெற்றிக்கோலத்தைமகிழ்ந்து கொண்டாடும்பொருட்டு நாங்கள் இன்றைய தினத்தை ஓர் பண்டிகைநாள் ஆக்கிவிட்டோம். (8).

மரூ:—எதற்கு மகிழ்கின்றீர்! எதனை வென்று இந்நகர்க்குக் கொணர்கின்றான் இவன்? சிறைப்பட்டதனை பூண்டு தன் தேர்க்கால்கொற்றமுடன் திகழ நம் ரோமாபுரிக்குள் தொடர்ந்து வரும் வேற்றரசர் யாவர்? (9) ஏ, கட்டைகாள், கல்காள், கல்லினும் மரத்தினும் கடையாயவர்களே, உரோமாபுரியின் குரூரம்மிகுந்த சனங்களே, இறுகிய இதயங்களே(10) பாம்பேயை அறியீரோ நீங்கள்? எத்தனையோ பன்முறை, சுவரும் மதிலும் கோபுரமும்சாளரமும், புகைக்கூண்டி னுச்சியினுங்கூட ஏறி, குழந்தையுங் கையுமாய் நீங்கள், மகா பாம்பே இந்நகர் வீதியிற் செல்வதைக்காண நாள்முழுதும் பொறுமையுடன் நெடிது காத்திருந்திருக்கின்றீர்கள் (11). அன்னான் தேர் மட்டுந்தென்பட்ட அளவிலே வளைந்து குவிந்த ஓரத்தில் உங்கள் பேரொலியின் எதிரொலி கேட்டுட் டைபருந் தன் கரையின்கீழ் நடுங்கும்படி நீங்கள் ஒன்றுகூடிப் பெருமுழக்கங்கள் செய்ததில்லையா (12)? இப்பொழுது உங்கள் ஆடைகளிற் சிறந்தவைகளையா அணிந்துகொள்கின்றீர்! இப்பொழுது நீங்கள், திருவிழாவா கொண்டாடப் புகுகின்றீர்! இப்பொழுது நீங்கள், பாம்பேயின் இரத்தத்தைவெற்றியுடன்மிதித்துவருமொருவன் வழியிலா மலர்கள் தூவுகின்றீர் (13). போங்கள்! உங்கள் வீடுகளுக்கு ஓடி முழந்தாள் படியிட்டு, இந்த நன்றிகேட்டிற்காக உங்கள்மேல் விழத்தான் இருக்கும் பெருவாரிநோய்களை இடையிடையே சிறிது தடுக்கும்படியேனும் உங்கள் தெய்வங்களை வேண்டிக்கொள்ளுங்கள். (14).

(4) இந்தச் சக்கிலிக்குச் சிலேடைத்திறமுண்டு. வேண்டாம்—வேண்டுகின்றேன் என்பதும் சிலேடை. வெடிக்காதீர்-கோபிக்காதீர். “அப்படிக் கோபத்தால் வீங்கி உன் தோல் வெடித்துப்போனாலும் நான் சக்கிலியாதலால் திருத்தித் தைத்துவிடுவேன்” என்பது இதன் கருத்து. மரூல்லஸும் ப்ளேவியஸும்ஒன்றும் விளங்காமல் மயங்குகின்றனர்.

(5) இதுவும் இங்கு வருகின்ற மற்றச் சிலேடைகளும் முதல் நூலில் சிலேடையாய் வந்துள சொற்களின் நேர் மொழிபெயர்ப்புக்க ளல்ல. அது இயலாதாகையால் ஒரு சிறிது அக்கருத்து அமையும்படி வேறு சிலேடைகள் தமிழில் வருவித்துக்கொள்ளப்பட்டன. இவன் கைத்தொழில் செருப்பாதலால், அதனில் எல்லாரும் காலிடுதல் என்பது, யாவரும் செருப்பு மாட்டிக்கொள்கின்றனர், எனப் பொருள்படும்.

(6) செருப்பணிந்து நடக்கின்ற பெரியமனிதர் எல்லாலாரும் இவன் செய்த செருப்பை யணிந்தே நடக்கின்றார், என்பது பொருள்.

(7) இதுவும் வம்புவார்த்தைதான். பலவகைச் சனங்களோடு பழகியிருப்பவர்களுக்கு, தொழிலாளர்களில் சக்கிலிகளே கூரிய புத்தியும் சொற்சாதுரியமும் அதிகமுடையவர்களாவது இன்றைக்கும் இந்நாட்டிலும் தெரியவந்திருக்கும். அப்படியே, அம்பட்டர் ஊர்வம்பளப்பதில் பேர்போனவர். ஜார்ஜ் எலியட் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய ரோமோலா என்னும் நாவலொன்றில் வருகின்ற அம்பட்டனிடத்திலும் இந்தத் தன்மையைக் காணலாம்.

(8) தம்முடைய பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகளைச் சனங்கள் மதிப்பும் மரியாதையுமின்றி எவ்வளவு அலட்சியமாய் நடத்துகின்றனர் என்பதைக்காட்ட இது போதுமாகையால் இவ்வளவோடு அவனது குறும்பை ஷேக்ஸ்பியர் நிறுத்திவிட்டார்.

(9) வென்ற பகையரசரை, அர்ச்சுனன் பாஞ்சால மன்னனைக் கொணர்ந்ததுபோல், தேர்க்காலில் கொற்ற வீரர் கட்டிக்கொணர்தல் உண்டு. ஸீஸர் இதற்குமுன் பலமுறை அவ்வாறு செய்திருக்கின்றாயினும், இப்பொழுதுவென்று வருவது பாம்பேயின் புத்திரர்கள் என்பதை மரூல்லஸ் நினைப்பூட்டுகின்றான்.

(10) இதயங்களே, என்பது ஆகுபெயராய் இதயம் உடையவர்களைக் குறிக்கின்றது.

(11) ஜனங்களின் தன்மை யின்னதே. எவர்பக்கம் ஜயமோ அவர் பக்கமே சார்ந்து நின்று கொண்டாடுவார். முன் பாம்பேயின் வெற்றிகளைப் பாராட்டி மகிழ்ந்தவர், இப்பொழுது அப் பாம்பேயைக் குலத்தோடும்தொலைத்த ஸீஸரைக் கொண்டாடுகின்றனர்.

(12) டைபர் என்பது உரோமாபுரியின்கண் ஓடும் ஒரு நதி. பாம்பே வருகையில் ஜனங்கள் எழுப்பிய ஒலியால் அந் நதியின் நீரும் நடுங்கியது என்பது பொருள்.

(13) பாம்பேயின் இரத்தத்தை மிதித்து வருதலென்பது, முன் பாம்பேயின் அழிவிற்கு ஸீஸர் காரணமாயிருந்ததையும், இப்பொழுது பாம்பேயின் மைந்தரை அழித்துவருவதையும் குறிக்கும். இரத்தம் என்பது சந்ததியை இங்கே சிறப்பாகக் காட்டுகின்றது.

(14) நன்றிகெட்ட உங்களைத் தெய்வங்கள் தண்டித்தே தீரும். முற்றிலும் உங்களை மன்னித்துவிடும்படிப் பிரார்த்திப்பதால் பயனில்லை. ஆகையால், பெருவாரி நோய் முதலியவைகளைச் சற்றே இடைவிட்டேனும் ஏவும்படி தெய்வங்களை நீங்கள் வேண்டிக்கொண்டால் ஒருகால் அத்தெய்வங்கள் அதனிற்கு இணங்கினும் இணங்கலாம்.

பளேவி:-போங்கள், போங்கள்—நன்னகர் வாசிகளே. இக்குற்றத்திற்கு (15) உங்களைப்போன்ற ஏழைச் சனங்களைக் கூட்டிக்கொண்டு டைபரின் கரைக்கு இழுத்துச் சென்று, மிகவும் தாழ்ந்த நீரும் யாதினும் உயர்ந்த கரையைத் தீண்டும்வரை அழுது அழுது உங்கள் கண்ணீரை வெள்ளத்தில் பாய்ச்சுங்கள். (16).

[நகரவாசிகள் போய்விடுகின்றனர்]

பார். கேடுகெட்ட இவர்கள் தன்மையும் கரையவில்லையா (17). தம் பிழைபற்றிக் கட்டுண்ட நாவோடும் மறைந்து விட்டனர் (18). நீ ஆட்சிமண்டபத்தை நோக்கி அவ்வழி செல். நான் இவ்வழி செல்வேன். சிலைகளுக்கு(19) அலங்காரம் செய்திருக்கக்காண்பாயாயின் அவைகளைக் கழற்றிவிடு.

மரு:—அப்படிச் செய்யலாமோ நாம். இன்றைக்கு லூபர்கல் பண்டிகை என்பதை அறிவாய் நீ (20).

ப்ளேவி:—ஆனால் என்ன ? எந்தச் சிலையிலும் ஸீஸரின் வெற்றிச்சின்னங்கள் தொங்கவிட்டிருக்க வேண்டாம். நான் சுற்றித் திரிந்து அந்தக் கீழ்மக்களைத் தெருக்களிலிருந்து துரத்துகின்றேன். (21) அவர்கள் அடர்ந்திருக்கக் காணுமிடங்களில் நீயும் அப்படியே செய். வளரும் இவ்விறகுகள் ஸீஸரின் சிறகினின்று பறிக்கப்பெற்றால் அவனைச் சாதாரண உயரத்திலேயே பறக்கவைக்கும். இல்லையேல், மனிதர் பார்வைக்கும் அப்பால் உயர்ந்து அடிமைகளென்ன நடுங்கும் அச்சத்தில் நம்மை அடக்கி வைப்பான் அவன். (22)

(15) நீங்கள் செய்த இக்குற்றத்திற்குக் கழுவாய் செய்யும்பொருட்டு—என்பது பொருள்.

(16) கரையின் உயரத்தால் நீர்மட்டம் மிகவும் தாழ்ந்த இடத்திலும்கூட, உங்கள் கண்ணீர்ப் பெருக்கினால் அந்நீர் உயர்ந்து கரையைத் தொடும்படி அழுங்கள்.

(17) கீழ்மக்களாகிய இவர்களும் என் மொழிகளால் மனங்கரைந்து இரங்கினர்.

(18) குற்றமுடைய நெஞ்சினர்களாகையால் யாதும் எதிர்பேச நாவெழாமல் நீங்கினர்.

(19) ஜூலியஸ் ஸீஸரின் உருவச்சிலை. ஸீஸரின் வெற்றி வருகையை முன்னிட்டு அச்சிலைகளுக்கு மாலை முதலியன சூட்டி அலங்கரித்திருத்தல்.

(20) லூபர்கல் பண்டிகை, உரோமர்களால், பிப்ரவரி மாதம் 15 உ யில் கொண்டாடப்படும் பண்டிகை.

(21) பொதுஜனப் பிரதிநிதிகளாகிய இவ்விருவரும் அச்சனங்களை எவ்வளவு இழிவாகக் கருதி வைகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(22) பாம்பேயின்பால் இவர்களுக்கு ஒரு சிறிதும் பரிவில்லை. ஸீஸரின் மிக்க புகழையும் பெருமையுங் கண்டு உண்டான பொறாமையே காரணம். ஸீஸரை வல்லூறுஆகவும் தங்களைச் சிறு பறவைகளாகவும் உருவகம் செய்கின்றான். ஷேக்ஸ்பியர்காலத்தில் இங்கிலாந்தில், பழகிய வல்லூறுகளைக்கொண்டு சிறு பறவைகளை வேட்டையாடுவதுண்டு. உரோமர்களுக்கு அவ்வேட்டை தெரியாதாயினும், ஷேக்ஸ்பியர் அதனை மறந்து, ப்ளேவியஸ் சொல்லும்படி வைக்கின்றார். முளைக்கும் இறகுகளைப்பறித்துவிட்டால்வல்லூறு அதிகம்பறக்க முடியாததாவதுபோல், ஸீஸரின் சிலைகளினின்று அலங்காரங்களை யகற்றி அவனுடைய கீர்த்தியைக் குறைக்கவேண்டும் என்பது கருத்தாயினும், இவ்விரண்டிற்கும் அதிகம் பொருத்தமின்மையை ப்ளேவியஸ் தன் பேச்சின் விரைவிற்கிடையே தெளிந்து கொள்ளவில்லை.

---

## கம்பராமாயணம்

[4-வது வால்யூம், 995-வது பக்கத் தொடர்ச்சி]

### ஆரணிய காண்டம்—1. விராதன் வதைப் படலம்.

கற்பினுற் காதல் கோண்ட
பெருமையை முனிவர் கண்டார்.

கல்வியிற் பெரியவர் கம்பர் என்னும் வாக்கியம் ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருளிற்கு உதாரணம் ஆவதன்றி அப்புலவரின் உண்மைச் சிறப்பை உரைக்கின்றஉதவியைச் சிந்தித்திலது. 'கம்பராற் பெரியது கல்வி' என மாற்றிக்கொள்வதே இம் மாபெருங் காவியத்தின் மகிமைக்குரிய முறையாகும் கற்றுக்கற்று ஒருவர் காரிகைகள் பாடலாம்; மற்றிக் கம்பராமாயணம் பாடுதலென்பது கல்வியால் ஆகுமென் றறையற்பாலதோ. கலைமகள் இன்று நம்முன் வந்து பேசுவாளெனின், கம்பர்தம், செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற்களைப் பயின்றுரைப்பதல்லால் தன் நாதந்தன நவிலத்துணியாள் திண்ணம். அவ்வணங்கு தைவரும் தெய்வவீணையின் நாதம் நம் செவிக்கு எட்டும்பாக்கியம் எய்துவோமாயின் கம்பர்தம் தமிழையே அது மிழற்றக் கேட்போம். பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு பெருகுவதற்கு நவில்தொறும் நயம்பெருகும் நூலினை உவமை கூறியபோது வள்ளுவநாயனார்தம்திருக்குறளையே நினைவிற் கொண்டிலராயின் வருதற்கிருந்த இந்தக்கம்பராமாயணத்தை முன்னறிந்தவராய்க் கருத்துட்கொண்டு கூறினவ ராதல்வேண்டும். மற்றுச் சீதாபிராட்டியைத் "தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்" என்று வருணித்த கம்பர்மனத்தின் முன்னின்ற இன்பம் தன் காவியத்தின் இன்பமே என்பதிற் சற்றேனு மையமில்லை என்னவே கம்பர் கவிகளில் கருத்துமுற்றத் தோய்ந்திருப்பார் அனைவரும் எளிதில் ஒவ்வுவார்.

அன்னதா மரிய காப்பியத்தின் முதலிரண்டு காண்டங்கள் இந் நான்காண்டுகளில் ஆராயப்பெற்றன. நுண்ணிய உண்மைகளை எங்கெங்கும் நுவல்கின்ற இந்நூலின் அழகிய பாசுரங்கள் அமைந்த பாலகாண்டமும் விழுமிய பாத்திரங்கள் அமைந்த அயோத்தியாகாண்டமும் கற்றோர் கருத்தைக் கனிவிக்கும் பெற்றியன. இனி ஆரணியகாண்டத்தைச் சேர்கின்றோம். சரயுநீர்நாட்டில் அவதரித்த இராகவன் கங்கையைக் கடந்துசென்று கோதாவிரிதீரத்தை அடைகின்றான். அவ்விடம் அடைந்தபின், அரக்கர தழிவு ஆரம்பமாகின்றது. முன், தலைகள்தோறும் முடியுடை அரக்கனுக்கு அந்நாள் முந்தி உற்பாதமாக அற்றுவீழ்ந்த வெற்றியம்பதாகைபோல் காகுத்தன் கன்னிப்போரில் தாடகை மாய்ந்து சாய்ந்த செவ்வியின்கண்,

கூசிவாள் அரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க வஞ்சி
ஆசையா லுழலுங் கூற்றும் சுவைசிறி தறிந்த தன்றே



[அரக்கர் உயிரைக் குடிக்கும் ஆசை அதிகம் உண்டெனினும் அவர்களை அணுக அஞ்சிக் கூசிக் கூசித் திரிந்த எமனும் இன்று அவ்வுயிர்ச் சுவையைச் சிறிது அறிந்தவனாயினன்.]

என்று இயம்பினர் கம்பர். சுவையறிந்தபின் ஆசையின் மிகுதியால் அமைதியற்றுச் சுழன்றிருந்த எமனுக்கு இனித் தெவிட்டும் காலம் வரஇருக்கின்றது. தாடகை காட்டிய சுவையை அவள் பேத்தி சூர்ப்பணகை கூட்டிக்கூட்டித்தர இராமன் தன் சுடுசரங்களால் சமைத்தூட்டி இயமனுக்கு நல்விருந்து செய்யும் வண்மையைச் சேணிருந்துகாணும் பாக்கியம் இமையவர்க்கு வாய்க்கலாயிற்று.

பாதுகை இரண்டுடன் பரதன் அரிதிற் பிறிந்து போயபின், இமையோர் இடுக்கண்தீர்க்கும் நோக்கினராய்,

முத்தி ருத்தியவ் விருந்தனை யமொய்ந்ந கையொடுஞ்
சித்தி ரக்குனி சிலைக்கும ரர்சென் றணுகினா
ரத்தி ரிப்பெய ரருந்தவ னிருந்த வமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழி றுவன்ற பழுவம்

[அழகிய வளைந்த வில்லினையுடைய இராம லக்ஷ்மணர்கள் முத்துக்கள் பதித்திருப்பது போன்ற நெருங்கிய பல்வரிசையுடைய சீதையுடன் சென்று, அரிய தவம்செய்த அத்திரி என்னும் முனிவர் வசித்திருந்த அமைதிவாய்ந்ததாய், இலைகளோடு பழங்களும் நிறைந்த மரச்சோலைகள் அடர்ந்த வனத்தைச் சேர்ந்தனர்]

சேர்ந்து, காமம் முதலிய முக்குறும்பு எறிந்த அம் முனிவனை வணங்குதலும், வந்தோர்க்குகந்த முகமன் கூறிய அத்திரிமகரிஷி தன் பத்தினி அநசூயையைக் கொண்டு அணிகலன்களும் பொன்னுடைகளும் கலவைச் சாந்தங்களும் சீதைக்குக் கொடுப்பித்து மற்றைநாள் விருந்தினர்களுக்கு விடையீந்தனன். இதனோடு கம்பர் விட்டாரானாலும் இந்த இடம் வான்மீகத்தில் சிறிது விரிவாகக் கூறப்பெற்றிருக்கின்றது. அங்கு அத்திரிமுனிவர்தம் பத்தினி, சீதையை நோக்கி அவளுக்குக் கற்பின்திறத்தைப் பலபடக்கூறி வற்புறுத்தத் தலைப்படுபவளாகி,

"கணவன் நகரத்தில் வசித்தாலும் வனத்தில் வசித்தாலும் பாவியாக இருந்தாலும் புண்ணியவானாக இருந்தாலும் அவனை இஷ்டமுடன் பாராட்டுகின்ற மனைவிக்கு மேலான உலகங்கள் கிடைக்கின்றன. அவன் தீயொழுக்க முடையவனாயினும் கர்மியாயினும் வறியனாயினும் நன்னடைக்கையுள்ள மடந்தைமார்க்குக் கணவனே சிறந்ததெய்வம். மாதர்களுக்குத்தம் கணவனைத்தவிரவேறு உயர்ந்த உறவினைக் காண்கின்றிலேன். நன்னடக்கை இல்லாத மாதர்கள், அழிவில்லாத தவம்போல எல்லா நிலைமையிலும் பாதுகாக்கவல்ல கணவனை யநுசரிப்பதிலுள்ள குணதோஷங்களை அறியார். காமத்திற்கு உள்ளானவர்களும், தங்கள்கணவரை அடக்கி ஆள்பவர்களும் கெட்டகாரியத்தைச்செய்பவர்களுமானபெண்கள் அபகீர்த்தியை அடைகிறார்கள். தாம் அடையக்கூடிய தருமத்தையும் இழக்கிறார்கள்......பதிவிரதைகளின் வழியில் நடக்கும் நீ, இராமரை அநுசரித்துக்கணவனுடன் தருமங்களை அநுஷ்டிப்பவளாக இரு. அதனால் நீ புண்ணியத்தையும் புகழையும் பெறுவாய்.'

என்று சாற்றினள். பிற்றைநாள் பிராட்டியை இலங்கையிற் றேடித் தன் கண்களால் கற்பின்[illegible]ணியைக் கண்டுவந்த அநுமன் [illegible]டும் இரா[illegible]னை இயம்புமளவில்

விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீ ரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங்
களிநடம் புரியக் கண்டேன்.

[வில் ஏந்திய பெரிய தோள்களையுடைய வீரனே, மிகுந்த நீர்சூழ்ந்த இலங்கைமலையிலே, நல்ல பெரியதவத்தையுடைய சிறந்த மாதொருத்தியை யான் கண்டேன் அல்லேன்-குடிப்பிறப்பு என்பது ஒன்றும், மிகுந்த பொறுமை என்பதொன்றும், கற்பென்னும் பெயருடைய ஒன்றும் களிப்புடன் நடனஞ் செய்துகொண்டிருப்பதையே கண்டேன்]

எனவியத்தற்குரியவோர் கற்பின் உருவம்போல்வாளை நோக்கிக் கற்புப் பாடம் ஓதவேண்டுமென அநசூயை மனங்கொண்டது எதுபற்றியோ வென்றெண்ணுதற்கியலவில்லை. கணவனைத்தொடர்ந்து அடவிக்குஉடன் ஏகநின்ற தன் மருகிக்குக் கோசலையும் இவ்வாறே, "குலத்துக்குத் தக்க ஆசாரத்தை யுடையவர்களும் உண்மை பேசுபவர்களும் மரியாதையை யுடையவர்களுமான பதிவிரதைகளுக்குப் பரிசுத்தி செய்பவனான கணவனொருவனே விசேஷமானவன். ஆகையால் காட்டுக்குப் போகவேண்டிநேரிட்ட என் குமாரனை இராமனை நீ அலட்சியம் பண்ணாதே. கணவன் செல்வம்படைத்தவனாகஇருந்தாலும் பணமற்றவனாக இருந்தாலும் அவன்தான் உனக்குத் தெய்வம்" என்று அறிவுறுத்தி அனுப்பும்படி வான்மீகிமுனிவர் செய்திருக்கின்றார். மாயைக்கெல்லாம் முதல்வனாய இராமன்மீது இராவணன் மாயாத்திரம் எய்ததை ஒக்கும் இது. கொல்லர்தெருவில் ஊசி விற்பது வர்த்தகமுறை யன்றாயினும் மானுட இயற்கைக்கோ அது மாறாயதன்று. மணிவாசகருக்குத் தெய்வபக்தியும் வீமசேனனுக்கு உடற்பயிற்சியும் நிலமகளுக்குப் பொறுமையும் நாமகட்குச் சொற்பொழிவும் சொல்லித்தருவதுபோல் சீதைக்குக் கற்பின் திறத்தை ஓதிய கோசலையும் அநசூயையும் இயற்கைக்கிணங்கியே இயம்பினர். மாணாக்கர் பண்பட்ட நீர்மையராயின் ஆசிரியர்தம் ஆர்வமும் ஊக்கமும் அதிகப்படும். அறிந்ததைச் சொல்வதும் திருந்தியதைத் திருத்துவதும் அழகுக்கேஅழகுசெய்வதும் எளியதாவதோடு இனியதுமாகும்.

நாகரிகம் மிகுந்த சீதாபிராட்டியும் இதனைத் தெரிந்துகொண்டனள் முன், "ஏழை யாயினனென்று இராமனை நீ அலட்சியம் செய்யாதே" என்றுஎடுத்துச் சொல்லிய கோசலைக்கு இவள் "தங்கள் உத்திரவுப் படியே எல்லாவற்றையுஞ் செய்கின்றேன். நான் கணவரிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை நன்றாகத் தெரிந்திருக்கின்றேன். இப்பொழுது தங்களிடமிருந்து அதைக் கேட்டுமிருக்கிறேன். என்னைக் கெட்ட பெண்பிள்ளைகளோடு ஒத்தவளாக எண்ண வேண்டாம்", என்று மறுமொழி யியம்பியபோது, தன்னைநோக்கி இச்சொல் சொல்ல நினைத்தாளே இம் மாமி என்று வருந்திய குரல் சிறிது கேட்கலாயிற்று. இன்று கற்பின் திறமுரைத்த அநசூயைக்குத் தானுமோர் பாடம் சீதை கற்பிக்க நினைத்தனள். "இக்காட்டை நோக்கி நான் புறப்பட்டபோது எனக்கு மாமியார் உபதேசித்த உபதேசம் என்மனத்தில் கௌரவத்

188949

துடன் தாங்கப்பட்டது.................உம்முடைய வாக்கியத்தால் அதெல்லாம் புதிதாகச் செய்யப்பட்டது'' என்று இவள் இயம்புதலும் அநசூயை "சீதை, இந்தப் புகழ்பெற்ற இராமரால் நீ சுயம்வரத்தில் அடையப்பட்டா யென்று ஒரு கதை என் காதை அடைந்திருக்கின்றது. மைதிலி நான் அக்கதையை விரிவாய்க் கேட்க விரும்புகிறேன்; ஆகையால் அக்கதையைமுழுவதையும் நடந்தபடிசொல்லவேண்டும்'' என்று வினவ; சீதை, தன் பிறப்பையும் ஜனகமன்னனுக்குத் தான் அருமைப் புதல்வியாய் வளர்ந்ததையும், தனக்கென்றமைத்த சுயம்வரத்தில் சிவன்வில்லை அசைக்கவும் ஆற்றாது வேந்தர்கள் மீண்டதையும், பிறகு வேள்விகாணிய விச்வாமித்திரனுடன்வந்த இராமன் அவ்வில்லிற்கு நாணேற்றி முறித்ததையும் கூறி, "அதன்பின் அங்குத் தமது கையிற் சிறந்த ஜலபாத்திரத்தை எடுத்துக்கொண்டுள்ள சத்தியசந்தராகிய தந்தையால், நான் இராமருக்குக் கொடுக்கநிச்சயிக்கப்பட்டேன். இராகவர், தந்தையாகிய அயோத்திக்கு மன்னவரானபிரபுவினுடைய கருத்தை யறியாமல் என்னை அங்கீகரிக்க விரும்பவில்லை. பின்பு என் தந்தை என்மாமனாகிய தசரதமன்னரை வரவழைத்து, புகழ்பெற்றவரான இராமருக்கு என்னைக் கொடுத்தார். என் தங்கை, தாமே, பதிவிரதையும் மிக்க அழகுடையவளும் என் தங்கையுமான ஊர்மிளையை லக்ஷ்மணனுக்கு விவாகம் பண்ணிக்கொடுத்தார். நான் அப்பொழுது அச் சுயம்வரத்தில் இப்படி இராமருக்குக் கொடுக்கப்பட்டேன். வீரர்களுள் முதல்வரான கணவரிடத்தில் தருமப்படி காதலுள்ளவளாயு மிருக்கின்றேன்'' என்று முடித்தாள்.

அநசூயை சீதைக்குக் கற்பின் கடமையைப் பலபட உரைத்தாளே யன்றிக் கடிமண வாழ்க்கையில் காதலுக்கு இடந்தந்திலள். பாகதி முதலிய ஊதியங்களுக்குஉதவுகின்றவோர் கருவியேயாக இவ்வண்ணம் கற்பினைக் கருதிச்சொன்ன முனிபன்னியைத் தன் மென்மொழியால் திருத்துவாள்போன்று இச்சனகன்பெற்ற அன்னம் "கணவரிடத்தில் தருமப்படி காதலுள்ளவளாயு மிருக்கின்றேன்'' என விளம்பினள். மேலுலகம் இல்லெனினும் கற்பையே கடைபிடிக்கும் விரதமுடையவள் தானுதலைத் தெரிவிப்பது மன்றி இதனால், அவ்விரதந்தான் வழுவாத உரமுடையதாவதற்குக் காதல் காரணமாய் நிற்கின்ற பரிசும் உணர்த்தப்பெறுகின்றது. கொண்டானைப் பிழையாமல் வாழ்கின்ற பெண்டிர்தம் கற்பிற்கு அவன்பால் உள்ள ஆசையும் ஆதார மாதல்கூடும். "எனதன்பு, எனதுயிர், யானேயாகிய இவனையோ யான் வஞ்சிப்பேன்'' என்றஞ்சியஞ்சிக் கற்பில் நிற்கவைக்கின்ற திப்பியத் தத்துவம் காதல். "அதனையும் உடையேன் ஆதலின் என் பெண்மைக்கு யாண்டும் இழுக்கிலது. மற்று, நீ பல சொல்லி வாய் வருந்தற்க'' என்று அநசூயைக்கே சீதையிங்கு உண்மைநெறி உணர்த்திக் காட்டுவாளாயினள்.

இதன்கண் மற்றுமொன்றுளது. கலியாணமாவதன் முன் சீதைக்கும் இராமனுக்கும், வான்மீகமுனிவர் நூலின்படி, காதல் பிறந்ததில்லை. தன் சிலைக்கல்வியின் சிறப்பைக் காட்டிய இராமனுக்குச் சனகன் சுயம்வரச் சூளின்படி சீதையை அளிக்க அவ்விராமனும் தயாதன் கருத்துணர்ந்து அவளை ஏற்றுக்கொண்டனன். எனின், சீதையை அவன் தாரமாய்க் கொண்டது ஒரு சாபத்தாலன்றிக் காதலாலன்று. சீதையும் தன் கோத்தந்தையின் கட்டளைக் கிணங்கியே இம்மணத்திற் குடன்பட்டாள். கம்பர் பெருமான் தமிழ்மரபிற்குத் தக்கபடி இம்முறையினை மாற்றி, கொடுப்பாரும் அடுப்பாரும் இடைவருதற்கு முன்னரே, மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும் மாறிப்புக் கிதயமெய்தி ஒருங்கிய இரண்டுடற் குயிரொன்றாகும்படி இனிதின் இழைத்துவிட்டார். வடநூலொடு இத்தமிழ்நூலை ஒப்பு நோக்கி இவ்விதம் மாற்றியதால் கம்பர்நூல் எண்ணரிய சிறப்படைந்ததென்று எடுத்துக் காட்டுவார் சில தமிழறிஞர். "வடமொழியாளர், கட்டாய மணத்தைக் கையாண்டிருக்கக் கம்பர் தாம் தமிழரென்னும் உயர்ந்த தன்மையால் காதல்மணத்தை நிகழ்த்திவைத்தார்'' என்னும் பெருமிதம் இது பெரும்பாலும் பாராட்டத்தக்கதேயாயினும் வான்மீகர் ஏற்றிய கற்பெனுங் குன்றம் இக்காதலிற்கு இணையோ, மற்று ஒருபடி உயர்ந்ததேயோ, என்று வியப்பதற்குரியதாய்த்தான் விளங்குகின்றது. இழுக்கற்ற இயற்கையளே சீதை என்பதிலையமில்லை. அதனோடு காதலால் மணந்துகொண்டவளா யிருத்தலால் அவள் கலங்காத கற்புமுடையவளாயினள் என்னுங் குறிப்பைக் கம்பராமாயணத்திலிருந்து பிறப்பித்துக்கொள்ளலாம். காதல், மனதின் வேட்கையையும் காதலிக்கப்படும் பொருளின் தன்மையையுஞ் சார்ந்து நிகழ்வதொன்றும். கற்போ அவ்வாறன்று. இது எதனையுஞ் சாராமல் தன்திறத்திலேயே தான் நிலைநிற்கவல்லது. கற்பினிற் சிறந்த மாதர்தம் மனம் பண்பெற்ற மாண்பினால் உண்மைக்காதல் சுரந்து உலவாமற் பெருகுகின்ற திண்மையை உடையவராகின்றார். "யான் கற்புடையேன், என் நாயகனை யான் காதலித்தல் வேண்டும்'' என்று மனங்கொண்டவளவில், காதல் பிறக்கிறதென்றால் அவருடைய பெருமை அளவிடற்பாலதோ. "கட்டளைப்படி காதல்கொள்ள இயலுமோ'' என்று கேட்கின்ற பரிகசக் கேள்வி பொதுவுற நிற்கும் உலகத்திற்குப் பொருந்தக்கூடியதாகலாம். மற்று, பொதுவறத்திகழும் புனிதமாயினோர்தம் நெஞ்சத்திட்பத்தினால் வேண்டிய விடத்துக் காதல்கொள்ளவும் வல்லவராகின்றார். தெய்வமாக் கவியாகிய வான்மீகர் இதனைச் செவ்விதின் உணர்ந்து கற்பினின்றுங் உண்மைக் காதலைப் பிறப்பித்தார். கற்பினால் காதல் பிறப்பித்துக்கொள்ளல் முன்னைய காதலால் கற்பு வழுவாதிருத்தலினும் ஓரளவு உயர்ந்ததாதலின், தான், "பொய்யில் கேள்விப் புலமையினோர் புகழ் தெய்வமாக்கவி மாட்சி தெரிவிக்கவே'' இராமாயணம் பாடினாரென்று கம்பர் கூறுகின்ற அவையடக்கமும் ஒருவாறு தக்கதே யாயிற்றென் றெண்ணலாம்.



# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்—29. தருக்கம்

[4-வது வால்யூம், 590-வது பக்கத் தொடர்ச்சி]

### (i) தருக்கக்கலையின் அவசியம்

*தர்க்கமிட்டுப் பாழாஞ் சமயக் குதர்க்கம்விட்டு*
*நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ!*

தாயுமானவர் - அன்பர் நெறி-8.

சமயங்களிலுள்ள குதர்க்கங்களைக்கண்டு அதைத் தள்ளிவிட்டுத் தருக்கவொழுங்கில் அன்பர்நெறியாகிய ஞானமார்க்கத்தை அடைதல் யாவருக்கும் இன்றியமையாததாதலால், திருநாவுக்கரசுநாயனார் இக்கலையை எவ்வாறு தழுவினரென்பதைச் சற்று ஆராய்வோம்.

தருக்கமாவது மொழியிலும், அதன் உணர்ச்சியிலும் மெய் என்பது யாது, பொய் என்பது யாது என்று கண்டறிய ஒரு கருவியாய் நிற்பதாம்.

மெய்யிற் சிவம்பிறக்க மேவுமின்பம் போய்மாதர்
பொய்யிலின் பின்றென்று பொருந்தாநா ளெந்நாளோ!

என்று தாயுமானார் கூறுவதுபோல், பொய்திகழும் உலகநடையானது, பொய்யில் ஆழவைப்பதே மரபாயிருத்தலால், பொருளல்லவற்றைப் பொருளெனக் காணலாகாதென்று தடுத்தலே தருக்கத்தின் முதற்படியாகும். ஆதலால் பொருள் என்பதும், அதன் தன்மை இன்னதென்பதும், அதன் வகைகளும், அதனைப் பகுத்தறியும் விதங்களும், அவ்வழியிலுண்டாகக்கூடும்பிழைகளும், அப்பிழைகளைச்சீர்திருத்தும் உபாயங்களும், தருக்கக் கலையின் நோக்கங்களாகும். ஆங்கிலம் முதலிய மேல்நாட்டுத் தருக்கத்திற்கும், வடமொழியிலும் தென்மொழியிலு முள்ள தருக்கத்திற்கும் பேதங்கள் பல விருப்பினும், மேற்கண்ட நோக்கங்கள் யாவும் இவ்விருவகைத் தருக்கங்களுக்கும் பொதுவாய்த் திகழ்வனவாம்.

தருக்கமானது பகுத்தறியும் புத்தியின் பிரயோகத்தைச் சீராக்கி ஒழுங்கான வழியில் அறிவைச் செலுத்த முயலும் நூலாகும். ஆதலால் இது அறிவுநூற்களில் மிகச் சிறந்த அறிவுக்கறிவான நூலென்பர். ஆயினும் அறிவு எவ்வழிச் செல்லவேண்டுமென்பதை உணர்த்துவதன் முன்னர், இருக்கின்ற வழிகளும் எவைகளென்று காணவேண்டுமாகையால், தருக்கநூல் சிலவற்ற்றை உடன்பாடான கொள்கைகளாய் எடுத்த பின்னரே, அவற்றைஅடிப்படையாகவமைத்து மேலே செய்யும் ஆராய்ச்சிக்குத் தக்கமார்க்கங்களைக் காட்டக்கூடும். உலகத்தை உற்றுநோக்கும் ஒரு சிறு குழவியானது பல்வகைப்பொருள்களைக்காண்கின்றது. இது மரம், இது விலங்கு, இது பூச்சு, இது உணவு என்னும் அறிவுகொள்ளவேண்டிய சமயங்களுக்குத் தர்க்கம் வேண்டுவதில்லை. உலகப்பொருள்களைக் கூடியவரையில் அறிந்தபின்னரே, மற்றுமுள்ள விஷயங்களை முன்னுணர்ந்தவிஷயங்களோடுகூட்டவோ விலக்கவோ அல்லது வேறுவகை செய்யவோ தர்க்கம் இன்றியமையாததாகும். குழவியின் அறிவு முதிர்ந்தபின்னர்க் காணும் பொருள் ஒன்று எப்பகுதியிற் சேர்ந்ததென ஆராய்வதற்குத் தருக்கம் அவசியமே. வைரக்கல்லைக் கண்ணாடிக் கல்லினின்று பகுத்தறிதற்கு முன்னனுபவம் வேண்டுவதன்றிப் பின்னர் ஒழுங்காய்ப் பிரித்தறியும் சக்தியும் வேண்டுமென்றோ? ஒன்றிருந்து மற்றொன்றில்லையாயின் உண்மையை யறியநேராது. ஆகையால் தர்க்கநூல் பயில்வதற்கு முன்பு ஏனைய அறிவுநூல்களைப் பயிலல்வேண்டும். அந்நூல்களின் எல்லோருக்கும் சம்மதமான சித்தாந்தங்களையும் அறிந்த பின்னரே, தருக்கம் முறைப்படிப் பயிலப் பயன்படும். இன்றேல் தருக்கம் வெறும் பேச்சாம். இத்தகைய தருக்கத்தையே தாயுமானவர். இவ்வாறு கூறுவார்:—

மாறுபடு தர்க்கந் தொடுக்கவறி வார்சாண்
வயிற்றின் பொருட்ட தாக
மண்டலமும் விண்டலமு மொன்றாகி மனதுழல
மாலாகி நிற்க வறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மொணமொ ணென்றகம் வேறதாம்
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்க வறிவார்
சீறுபுலி போல்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்க வறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கையொடு முளற வறிவார்
ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவ ரறிவார் ?
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே !

ஆநந்தமானபரம் - 3.

### (ii) தருக்கமும் மனோசாஸ்திரமும்

மனதின் அடிப்படையான புத்தி எவ்வாறு ஒரு குழவியிடம் வெளிப்படையாகி, அது விருத்தியடைகின்றதென்று கவனிப்போம். ஒருகுழவியின் மனம் புத்தி - சுத்த சூன்யத்தினின்று ஆரம்பிக்கின்றதில்லையென்பது திண்ணம். பிறந்து கண்களைத் திறந்தவுடன் கண்ட காட்சிகள் யாவும் மிகவும் அற்புதமாக அக்குழந்தைக்கு விளங்குவதை அதன் சைகைகளால் நாம் உணரலாகும். பிறவியின் ஆரம்பத்தில் ஒரு குழந்தை மனம்-புத்தி ஓர் வெள்ளைக் கடிதத்திற்காகிலும், அல்லது ஓர்மாசற்ற பளிங்குக்காகிலும்ஒப்பிடக்கூடிய தன்மை வாய்ந்து வரவில்லை. தாய்தந்தையர் உணர்ச்சியின் சேஷமோ, அல்லது பூர்வசன்ம வாசனையோ ஏதோசற்று அறிவுடனேயே வருகின்றதென்பதை ஒவ்வொருகுழந்தையின் செய்கைகளாலும்நாம் கண்டறியலாம். அது பிறந்தவுடன் உலகத்திலுள்ள பொருள்களையும் விடயங்களையும் கண்டு திகைத்துப் புலம்பாநிற்கும். இதையே ஒருவகையாய் உருவகப்படுத்தித் திருநாவுக்கரசு மொழிவது காண்க :—

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள்! தீவினைகாள்! திருவே! நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்
இல்லையே கிடந்துதான் யானேல் வாடே

தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச்செய்யு
மெம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றே
னிடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே!
—திருவாரூர்—திருத்தாண்டகம்-1.

இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பது உலகத்தில் பிறவியெடுத்தசீவனுடைய தொழிலான்கிறது. "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால்......அத்தைத் தின்று அங்கே கிட"ப்பது அதன் தொழிலென்றூர் நம்மாழ்வார். அவ்வாறு அரித்துத்தின்பதுயாதென்று நாம் ஆராய்வோமாயின் பஞ்சேந்திரியங்களாலே அச் சீவன் தன் மனதுக்கு எட்டியமட்டும் செய்யும் ஆட்சி யென்னலாம். இதனை,

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கண்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னூரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென்
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத் [சிந்தை
தலைப்படுவேன் றலைப்படுப்பான் றருக்கேன்
[மின்னே.
—திருவாரூர் - திருத்தாண்டகம் - 4.

என்னும் அப்பர் பாசுரத்திலு மறிக.

ஆகையால் குழந்தை பிறந்ததுமுதல் உலகத்தினில் காணப்படும் எல்லாப் பொருள்களையும் தாவித் தன் வசமாக்க முயல்வதே தன் தொழிலாக்கிக்கொள்ளும் எண்ணமுடையதாய் விளங்கும். அம்புலிப்பருவத்தில் குழந்தைகள்*வானத்தில் காணப்படும் சந்திரனைத் தாவிப்பிடிக்க முயல்வதும் இவ்வகை யெண்ணத்தாலன்றோ ? உலகத்தில் உதிக்கும்போதே அண்டங்கள் முழுவதும் ஆட்சிதந்தாலும் போதாத அவாக் கொண்டிருப்பதால், இவ்வையகம் அதற்குப் போதாமல் மிகவும் சிறியதாகவே காணப்படும். இதனை

பிண்டத் திற்பிறந்ததோரு பொருளை மற்றைப்
பிண்டத்தைப் படைத்ததனைப் பெரிய வேதத்
துண்டத்திற் பணிபொருளைச் சுடுதீ யாகிச்
சுழல்காலாய் நீராகிப் பாரா யிற்றைக்
கண்டத்திற் றீதுநஞ் சமுது செய்து
கண்மூன்று படைத்ததொரு கரும்பைப் பாலை
யண்டத்திற் கப்புறத்தார் தமக்கு வித்தை
யாரூரிற் கண்டடியே னயர்த்த வாறே
திருவாரூர் - திருத்தாண்டகம்-5.

என்னும் அப்பர் பாசுரத்தின் குறிப்பாலு முணர்க.

"மூல முதற்கரு" வினின்றும் புகை (Nebula) எண்வகையாய்த் தோன்றிப் பஞ்சபூதங்களாய்ப் பற்பல உலகங்களாய் விரிந்ததென்றும்,முதலினின்ற ஆதி சூக்குமப் பொருளின் தத்துவந்தான் மனமென்றும், முறையே ஆகாயம்முதல் மண் ணீறாகப் பஞ்சபூதங்களின் தத்துவம் செவி முதல் பஞ்சேந்திரியங்களென்றுங் கூறுவர். இத்தகைய மாயாவிருத்திப் பிரபஞ்சோர்ப்பத்தியை அப்பர்தம் வினவினால்வெளியிடுவது காண்க. பஞ்சேந்திரியங்களுடன் திரிகரணங்களைச் சேர்த்துப் புலன்கள் எட்டென்பர்.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதலங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டுங்
கலையெட்டும் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டு நாளெட்டு நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்க ளெட்டுந்
திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே ?
திருவாரூர் - திருத்தாண்டகம் - 9.

சூன்யமான புகையினின்று முறையே ஆகாயமும், அதினின்று காற்றம், அதனால் தீயும், அத்தீயால் நீரும், நீரினின்று மண்ணும் வெளிவந்தனவென்பது புராணக் கற்பனையாய்க் காணப்படினும், நவீன மேல்நாட்டு அறிவியல் ஆராய்ச்சிக்குச் சற்றுப் பொருந்துவதாகவே காணப்படுகின்றது. இன்னும் உலகங்கள் உற்பத்தியாகின்றன. அவை, சில நட்சத்திரங்களிடையே காணப்படும் புகைகள் (Nebulae) என்று தூரதிருஷ்டிக் கண்ணுடியால் வானசாஸ்திரிகள் நிரூபிக்கின்றன ரன்றோ? அப்புகைகளின் போக்கையும் அவற்றினின்று உண்டாகும் பதார்த்த வகைகளையும் சில நூற்றுண்டுகளுக்குப் பதிவுசெய்து பார்ப்பின், நம் முன்னோர் கூற்றுக்கு நற்சான்றுகும்.

ஓரே தன்மையதாய் ஏகமாய் நிற்கும் ஆகாயத்தினிடையே, அசைவும் அசைவின்மையுமான இருவகைத் தன்மை பெற்ற வாயுவும், வீசும் வாயுவினின்று மூவகைத்தீயும், செந்தீயினின்று நால்வகை நீரும், தாழ்நீரினின்று ஐவகை மண்ணும் உற்பத்தியாகிப் பின்னர் நானுவித சிருட்டிப் பிரபஞ்சமாய் விளங்கும் தன்மையைத் திருநாவுக்கரசுநாயனுர் விளக்குவதை நோக்குக.

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கா றன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலி னன்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.
திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருத்தாண்டாம் 5.

ஆகாயத்தினின்று படிப்படி முறையே முடிவில் வந்த தரணியில் உதித்த சீவர்கள் முறையே உயர்வதானல் * மண்ணின் சம்பந்தமான பரிசவுணர்வும், மண், நீர், தீ இவற்றின் குணங்களான உணர்ச்சிகளாம் பரிசம் சுவை நாற்றங்களையும், இவற்றுடன் வாயுவின் சம்பந்தத்தால் விளையும் ஒளியின் உணர்வும், இவற்றுடன் ஆகாய சம்பந்தம் பெற்றுவரும் ஓசையும், இவற்றையெல்லாம் பகுத்தறியும் மனமும் ஆக ஆறறிவும் சீவர்களின் நிலை உயர உயர வெளியாகும். மனம் வெளிவந்த காலையிலே ஜீவன் "உலகு எது, நான் ஆர்" என்னும் உணர்ச்சி † பெறுகின்றான். இக்காலத்திலேயேதான் தர்க்கஞானம் அவனுக்குப்பபன்படும். மனதின் உணர்ச்சியைச்சீர்திருத்தவும், உயர்தரு நிலைக்குக்கொண்டுவரவும் பயன்படும் நூல்தருக்கமாம்.

* இதைச் சம்பந்தர் இயற்கையில் வர்ணிக்கும் தன்மை காண்க:—

அங்மொ ராறுடை வேள்வியான வருமறை நான்கும்
பங்கமில் பாடலொ டாடல் பாணி பயின்ற படிறர்
சங்கமதார்குற மாதர் தங்கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலில் மாமதி பற்றும் கற்குடி மாமலை யாரே.
திருக்கற்குடி - பண் - தக்கராகம் - 2.

* ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

† தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் கற்ற வெளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லா
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.
திருமறைக்காடு-திருத்தாண்டகம்.



## வர்த்தமானம்

அவசரச் சட்டங்கள்:—எல்லைப்புற மாகாணத்தில் பொது ஜன அமைதிக்கு விரோதமான இயக்கங்கள் நடைபெறுவதால், அவ்வியக்கங்களை அடக்கச் சாதாரண கிரிமினல் சட்டங்கள் போதாவென மதித்து இந்திய ராஜப்பிரதிநிதி மூன்று அவசரச் சட்டங்களைக் கையாள எல்லைப்புறமாகாண அதிகாரிக்கு அனுமதி கொடுத்துள்ளார். அச்சட்டங்களின்படி அதிகாரிகளுக்கு விசேஷ அதிகாரங்கள் பல அளிக்கப்பட் டிருக்கின்றன. அமைதிக்கு விரோதமான இயக்கத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை அதிகாரிகள் கைதி செய்யலாம், காவலில் வைக்கலாம். எவராவது கலக இயக்கத்தில் சேர்ந்திருப்பதாகவோ, அல்லது சேர்வாரென்று அதிகாரிகளுக்கு எண்ண இடமிருக்குமானலோ அத்தகையவர்களைப் பந்தோபஸ்தில் வைக்கவோ, வெளியேற்றவோ, குறித்தவொரு எல்லையைக் கடக்காது பார்த்துக் கொள்ளவோ அதிகாரமுண்டு. வீடு வாசல்களைப் பறிமுதல் செய்யவும் அதிகாரமுண்டு. அதிகாரிகள் இடும் உத்தரவைக் கடப்பவர்களுக்கு 2 வருட சிறைவாசமோ, அபராதமோ அல்லது இரண்டுமோ அளிக்கப்படும். பொதுஜன அமைதிக்கு விரோதமான தூண்டுப் பிரசுரங்களைத்தடுக்கவும், பறிமுதல் செய்யவும் அதிகாரம் உண்டு. எந்தச்சங்கம் இருப்பது அமைதிக்கு விரோதம் என்று தோன்றுகின்றதோ அச்சங்கத்தைத் தடுக்கவும், கலைக்கவும், அச்சங்கத்தில் சேர்ந்தவர்களைக் கைதுசெய்யவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. இச்சட்டங்களை ஒட்டி எல்லைப்புறசீப் கமிஷனர் பின்வரும் சங்கங்கள் சட்ட விரோதமானதென்று அறிவித்திருக்கின்றார்:—

வடமேற்கு மாகாண ஜில்லா அல்லது காங்கிரஸ் கமிட்டி. அக்கமிட்டியின் ஜில்லா தாலுக்கா கிளைச்சங்கங்கள்.

தொண்டர்படை ஸ்தாபனங்கள், பகிஷ்கார ஸ்தாபனங்கள். இவ்வேலையில் ஈடுபடக்கூடிய எப்பெயர் கொண்ட ஸ்தாபனங்களாயிருந்தாலும் சரி அவைகள் சட்ட விரோதமான ஸ்தாபனங்கள்.

மஹா நவஜீவன் பாரத சபை என்ற சங்கமும் அதன் கிளைகளும்.

***

பம்பாயில் கூடிய கூட்டமொன்றில் காந்தியடிகள் பேசுகையில், இப்பொழுது அதிகாரிகள் கையாளும் அடக்குமுறை சமாதானத்திற்கும் சமரசத்திற்கும் விரோதம் என்றும், தாம் சத்தியாக்கிரஹப் போராட்டந் துவக்குவதா வேண்டாவோ என்று இன்னும் தீர்மானம் செய்யவில்லை என்றும், அமைதி முறையினுல் நமது காரியங்கள் சாத்தியமாகாதுபோய்ச் சத்தியாக்கிரஹப் போர் தொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுமானல், தாம் அப்பொழுது போராட்டத்தை நடத்தப் பின்வாங்கப் போவதில்லை யென்றும் கூறியுள்ளார்.

எல்லைப்புறக்காந்தி என்று அழைக்கப்படும். அப்துல் கபர்கானும் அவரது சகோதரரும் கைது செய்யப்பட்ட பின்னர் எல்லைப்புற மாகாணத்தில் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் டிசம்பர் மாதம் கடைசி வாரத்துக் கணக்குப்படி இதுவரை 1000 பேர் கைதியாயுள்ளார் என்றும் காங்கிரஸ் செய்தி கூறுகின்றது.

***

சர்வகட்சி மஹா நாட்டுக் கமிட்டி:—டிசம்பர்மாதம் 1-ந்தேதி ராம்ஸேமாக்டொனல்ட் வெளியிட்ட அறிக்கையின்படி சர்வகட்சி மஹா நாட்டின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதற்கான கமிட்டிகள் நியமனமாயின. இக்கமிட்டியின் ஐரோப்பிய அங்கத்தினர்களைப் பற்றிய விவரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய அங்கத்தினர்களைப் பற்றியவிவரம் சீக்கிரத்தில் வெளியிடப்படும்.

வாக்குரிமைக் கமிட்டியின் ஐரோப்பிய அங்கத்தினர்கள்:—ஸர். எர்னஸ்' பென்னட், ஆர். எ.பட்லர், டப்ரின் பிரபு, ஸர். ஜான்கேர். ஜெ. மில்லினர், எம்பிக் போர்ட்; இக்கமிட்டியின தலைவர் லோதியன் பிரபு.

இந்தியப் பொருள் விஷயப் பரிசீலனைக் கமிட்டி:- ஸர். ஹூயிகொர்ஷா, பி. ராபின்ஸன். இக்கமிட்டியின் தலைவர் லார்ட் யூஸ்டஸ் பர்ஸி.

சுதேச சமஸ்தான விஷய விசாரணைக் கமிட்டியின் அங்கத்தினர்கள்:—லார்ட் ஹேஸ்டிங்க்ஸ், ஜெனரல் ராபர்ட் ஹட்ஸன், ஸர். ரெஜினல்ட் கிரான்ஸி, ஸர். மாரிஸ் கெய்ரோ. இக்கமிட்டியின் தலைவர் ஜெ. ஸி. ஸி. டேவிட்ஸன் மேற்கூடிய 8 கமிட்டி சங்கத்தினர்களும் தலைவர்களும் ஜனவரி மாதம் 14-ந் தேதி இந்தியாவிற்குப் புறப்படுவார்.

***

பிரஞ்சு இந்திய அரசாங்கத்தார் பொதுஜன விருப்பத்தை ஏற்று நிலவரியை 100க்கு 20 வீதம் குறைத்துவிட்டனர்என்று புதுச்சேரிச் செய்தி கூறுகிறது.

***

அமெரிக்காக் கோடீஸ்வரர்களில் ஒருவரான ஜான் ராக்பெல்லர் என்பவர் உலகத்திலுள்ள பல பாகங்களிலும் தர்மவேலைக்கென்று 300 கோடி ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கின்றனர் என்று அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏஜெண்டுகள்:
குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்


டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
நஞ்சன்கூடு பல்பொடி
கோரோஜனை மாத்திரை
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்
சென... 00 009

KALANILAYAM.
REG. No. M. 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

## "ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

**ஆயுர்வேதாஸ்ரமம்**

தபாற் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனாம்.

---

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

---

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நாடு | | விலை வெளிநாடு |
|---|---|---|
| „ 9-0-0 | அரைலெதர் பயிண்டு | „ 10-8-0 |
| „ 8-8-0 | காலிகோ | „ 10-0-0 |
| „ 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணா ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

---

எற்படுத்தியது] **நாஷனல்** [1906

## இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு
பெண்ணின் வரதக்ஷணை குடும்பச் சேமிப்பு
இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் „ 86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

---

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை
நாஷனல் நெருப்பு
& ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார்
கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்.,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

---

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

## :: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

---

## — திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கபபட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

---

## :: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)